உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஸு ஐப்பசி-மீ 5-உ. (21—10—1934) | மலர் 9.

## உழைப்பாளர் உறுதுயர்.

(தோழர் அ. சிதம்பரநாதன், அங்குராங்கட்டை, சிலோன்.)

அறுசீரடி விருத்தங்கள்.

1. உடலினைக் கசக்கி வேர்வை
ஒழுகிட உழைக்கும் மக்கள்
மடலொடும் அடிமையாகி
மதியிழந்துழலுகின்றார்
உடலுழைத் தலுத்திடாமல்
உழைப்போர்கள் பயனைக் கொள்வோர்
திடமிகும் உள்ளத் தோடும்
திறம்படத் திகழுகின்றார்.

2. பாடுபட் டுழைத்திடாத
பகற் கொள்ளைக் கூட்டமான
கேடுசெய் ஜமீன்கள் செல்வர்
குருக்கள்கோமான்போன்றோர்கள்
நாடுகள் உரிமையாக்கி
நாட்டினர் வாழ்க்கைத் திட்டம்
பாடுபட்டோர்கள் தத்தம்
பயனடையாத வாறு.

3. தங்கள் வாழ் நாட்கள் முற்றுந்
தனவந்தர்க் குழைப்பதற்கே
இங்குநாம் பிறந்தோ மென்ற
எண்ணத்தா லுழைத்துச் சீவன்
தங்கிடக் குறைந்த மட்டும்
தானியம் சிறிது பெற்றுத்
தங்களின் இனிய வாழ்வைத்
தவிர்த்துயிர் வருந்துகின்றார்.

4. பொருளபிவிருத்தியற்றுப்
பூமியிற் பயிர்செய்கின்ற
பெருங்கொண்ட சமூகமான
பேருபகாரமக்கள்
உரிமையைப் பாதுகாக்க
அரசியல் ஞானமற்று
குறுகிய வாழ்க்கை யோடு
கொடுமைசெய் தொதுக்கப்பட்டார்.

5. பாடுபட்டுழைக்கு மேழை
பயனினைக் கொள்ளைகொண்டு
வீடுகோட் டங்களென்று
விதவிதமாயமைத்த
கேடுகள் விலகக் கோவில்
குளங்கள்சத் திரமமைத்து
நாடுநீ தானதர்மம்
நல்கிடும் மோட்சமென்றார்.

6. கொள்ளைசெய்துள்ள சொத்தால்
குளம், கோவில் அமைத்துவைத்து
கொள்ளையோர் பாகச் சொத்தைக்
குருக்களுக் கீந்துவிட்டால்
கொள்ளைகள் மோசம், வஞ்சம்
குற்றங்கள் தவிர்க்கப்பட்டு
வள்ளலாய்த் திகழ்ந்து மோட்ச
வாழ்வுநீ பெறுவாயென்பார்.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| The Right of Temple Entry } Eng-lish. | 1-0-0 | நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| The Crux of the Indian Problem } Eng-lish. | 1-0-0 | | |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 4.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
ஈரோடு.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளி வரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

# அறிவைக்கண்ட பொறாமையே ஒழிய ஆட்டவாவிலொன்றுமில்லை.

[கைவல்யம்]

இந்திய சட்டசபைக்கு அபேட்சகர்களாக நிற்கும் தோழர்கள் சர். ஷண்முகம், டாக்டர் வரதராஜுலு, ஏ. ராமசாமி முதலியார் இவர்களைப்பார்ப்பாரப் பத்திரிகைகள் தூஷித்தெழுதுகின்றன. காங்கிரஸ்பேரைச்சொல்லி மகாத்மா காந்தியைக் காட்டி நியாயமில்லாமல் பிரசங்க மேடைகளில் இஷ்டம் போல் கொடுமையாகத் தூஷிக்கிறார்கள். உலகம் உண்மையைத் தெரிந்து கொள்ளட்டுமென்று பொறுமையுடனிருப்பதேயல்லாமல் தூஷணைக்குப் பயந்தும்,எழுதத்தெரியாமலும் பேசத்தெரியாமலுமல்ல.

ஆட்டவா விஷயமாய் இந்திய சட்டசபையில் கேள்விகளும், சமாதானங்களும் நடந்து முடிவடைந்த விஷயம். சென்ற வருடம் சென்னை செனட் மண்டபத்தில் பொருளாதார சாஸ்திர சங்கத்தின் ஆதரவின் கீழ் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திற்கு சென்னை நகரத்தில் பொருளாதார நிபுணர்களென்று சொல்லப்படுகிற ஆசிரியர்கள், அதைப்பற்றிப் படித்தவர்கள், பத்திராதிபர்கள்உயர்தரகலாசாலை மாணாக்கர்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லாம் கூட்டமாக வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் சர். ஷண்முகம் ஆட்டவா விஷயமாக ஒரு பிரசங்கம் செய்தார். பலர் கேள்விகள் கேட்டார்கள்.புள்ளி புள்ளியாக விபரத்துடன் பதில் சொன்னார். எல்லோரும் திருப்தியோடு பிரிந்தார்கள். விருதுநகர் கூட்டத்திலும் சர்.ஷண்முகம் சொன்னதை நீங்கள் படித்திருப்பீர்கள். அவர் சொல்லும் புள்ளி விபரங்களுக்கு விபரமான பதில் சொல்லாமல் குற்றஞ்சொல்லி தூஷிக்கிறார்கள். மற்ற நாடுகளும், மற்ற நாட்டு நியாயப் பொது அறிவாளிகளும் அவரது அறிவின்விசாலத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். இதற்குக் காரணம் மற்ற நாடுகளில் சூத்திர ஜாதிகளில்லை. நம் நாட்டில் அதிலும் தென்னாட்டுக்கு அவர்வந்த வுடனேசூத்திர ஜாதியாகி விடுகிறார்.

மேற்சொன்ன மூன்று பேர்களும் சூத்திர ஜாதி, படித்தவர்கள், அறிவுடையவர்களென்று உலகம் சொல்லக்கூடியவர்கள் பார்ப்பார்களின் மாய மந்திர இருளில் மயங்காதவர்கள் பார்ப்பார்கள் அனுபவிக்குமிடத்திற்குப்போகக்கூடியவர்களாம். இந்தப்பொறாமை காரணமே ஒழியவேறு ஒன்றுமில்லை. பார்ப்பார்களுக்கு அந்தப் பொறாமை எங்கிருந்துண்டாயிற்று என்றால் அவர்கள் கடவுள், வேதம், மந்திரம், நெடுநாள் பழக்கம் முதலியவைகளிலிருந்து கிடைத்தன அது எப்படி?

சுயமரியாதைச்சங்கம் உண்டான பின் சூத்திரன் என்பதின் அர்த்தம் பகிரங்கமாகச் சொல்லப்பட்டது.அதற்குப்பின் நாலாம் வருணத்தான் உழுது பயிர் செய்கிறவன் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். சூத்திரனென்றால் அடிமை, மடையன், பிராமணதாசிமகன், ஒழுக்கம் கெட்டவன், ஆசாரமில்லாதவன்என்றே வேதஸ்மிருதி இதிகாசங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ரிக்கார்டிலிருப்பதை மறுக்க யாராலும் முடியாது.

பிராமண குருவையும், புரோகிதனையும் ஆதாரமாகக்கொண்டிருக்கிறதென் தேசத்தவர்கள் சூத்திரனுக்கப் பட்டிருக்கிறார்கள்.

பிர்ம ஞானமும், விரிந்த வாழ்வும், அறிவும், கல்வியும், ராஜாங்கப்பதவியும் சூத்திரனுக்கில்லை யென்பதே பண்டுள்ள விதியாகும். அந்த விதியைத்தான் தருமமென்பது.அந்தவிதியும் தருமமும் கடவுள் வேதத்தில் சொல்லியிருக்கிறார் என்று இந்து ராஜக்களுக்கும் பிரபுகளுக்கும் சொல்லி அதைச்சிறிது மீறினாலும்அவன் தொண்டையிலும்,காதிலும்ஈயத்தை உருக்கி விட்டும், நாக்கையறுத்தும், நெஞ்சைப்பிளந்தும் கொடுமையாகத் தெண்டித்துக் கொன்றார்கள். அவ்விதம் கொடுமையாகத் தண்டித்து அவர்கள் தருமத்தை நடத்தாத ராஜாக்கள் அவர்களின் தகப்பன்களுக்குப் பிறக்காதவர்களென்று வேதத்திலிருப்பதாக ராஜாக்களுக்குச் சொன்னார்கள். இதற்குப் பயந்தும், கடவுள் சொன்னதென்று நம்பியும் ராஜாக்கள் அக்கொடுமைக்கு ஆளாயிருந்தார்கள். இதனால் பிராமணர்கள் தங்கள் ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாகவே கெட்டிப்படுத்தி மற்ற சமூகங்களின் அறிவை ஒடுக்கி விட்டார்கள். அறிவின் வேர்களைப்பறித்து விட்ட படியால் மற்ற ஜாதிகள் சுதந்திரமாய்க் காரியங்கள் செய்து மேனோக்கவில்லை சூத்திரன் என்று சொல்லும்படியானவர்களின் தலை பிராமணனுடைய பாததூளியிலே ஈடுபட்டிருப்பதைக் காக்க அவர்களுக்குச் சிரமமில்லாமலிருந்தது.

இவர்கள் உபத்திரவத்திற்குப் பயந்து காட்டிற்குத் தவசு செய்யப் போன சூத்திரனை சம்பூகன் தவசு செய்தானென்கிற குற்றத்திற்காக இராமர் அவன் தலையைக் கொய்தார் என்கிற கதை யிலிருந்தும் மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ" என்ற வேத வாக்கியத்திற்கு ராஜாவின் குருவிடம் பொருள் கேட்கக்கேட்டபார்ப்பாரல்லாதவனை உச்சிக்கு மேல் பத்து அங்குலம் கழுஊசி ஏறும்படியாய்க் கழுவேற்றித் சூத்திரர்களுக்கு வேதத்தின் பொருள் இத் தன்மையதே யாகுமென்று ராஜ குரு சொன்னதும், மகமதியர் ஆட்சி புரிந்த மகாராஷ்டிர தேசம் சிவாஜிக்கு வந்ததும் பார்ப்பார்கள் மனுதருமத்தை சிவாஜிக்குச் சொல்லி மகமதியர்கள் காலத்தில் வேத சாஸ்திரம் படித்த நாற்பது பண்டிதர்களைக் கொல்வித்தது வரையிலுமுள்ள கதைகளும், இந்து மதத்தை மேல்நாட்டில் விசேடப்படுத்தின சுவாமி விவேகாநந்தர் உயர்ந்த ஜாதிக்காரர்களால் செய்யப்படும் சில கொடுமைகளைச்சொன்னவுடன் "சுவாமி விவேகாநந்தர் சூத்திரன்.இந்து வேதத்தைச் சொல்ல இவருக்கு என்ன அதிகாரமிருக்கிறது" என்று எழுதினார்கள். மகாத்மா காந்தி தீண்டாமைப் பிரசாரம் செய்யும்பொழுது சமஸ்கிரதம் தெரியாதவன் இவனுக்கு இந்து மதத்தைச் சீர்திருத்தம் செய்ய அதிகாரமே இல்லை என்றார்கள். இதற்கெல்லாம் சூத்திரன் என்கிற ஒரு காரணம் தானே

திருவள்ளுவர், பட்டணத்தார், தாயுமானவர் இன்னும் பல தென்னாட்டுச் சித்தர்கள் இவர்களைப்பார்ப்பார்கள் எவ்வளவு தூரம் வணங்குகிறார்கள், கொண்டாடுகிறார்கள். அப்பர் சுவாமிகளை இன்னும் சூத்திரன் என்கிற காரணத்தால் அவர் பின்னால் வேதம் சொல்ல இன்னும் ஆட்சேபனைதானே? சூத்திரன் என்கிற ஜாதிகளுக்கு அறிவு உண்டாவதில் பிராமணர்களுக்கும், அவர்களின் வேதத்திற்கும், அவர்கள் கடவுளுக்கும் ஒரு சிறிதும் சம்மதமில்லை. அறிவடையும் சூத்திரனைத் தண்டிக்க வேண்டும், கொல்லவேண்டும், கொளுத்த வேண்டும், சுட்டு நீறாக்கவேண்டுமென்று வேதங்களே சொல்லுகின்றன. அவர்கள் கடவுள் வணக்கமும் அப்படியே என்பதை கீழே காணும் வேத பிரமாணத்தால் அறியலாம்.

"இந்திர ஸமத்ஸு யஜமானமார்யம்
ப்ராவத்விஸ்லே
ஷு சத மூதிராஜிஷு ஸ்வமீடேஷ்
வாஜிஷு மனவே
சாஸதவ்ரதான் த்வசம் க்ருஷ்ணா
மரந்தயத் தக்ஷன்ன
விஸ்வம் தத்ருஷரண மோஷதி ந்யர்
சஸான மோஷதி"

(இதன்பொருள்) "பலவகையில் எங்களைக் காக்கும் இந்திரனே! பொதுவாக எல்லாச் சண்டைகளிலும் பொறாமையினால் உண்டாகும் சண்டைகளிலும் சுகத்தை விரும்பி உண்டாகும் சண்டைகளிலும் தேவரீர் யாகம் செய்யும் ஆரியரைக் காப்பாற்ற வேண்டும். கருப்புத்தோலுடைய கொடியோர்களைக் கொன்று கொளுத்திவிட வேண்டும். கொடுமையாளர்களாகிய அக் கருப்பர்களைக் கொளுத்தி நீறாக்க வேண்டும், துன்பத்தைச் செய்கிறவர்களான அத் துஷ்டர்களை வேரோடு சுட்டு நீறாக்க வேண்டும்." இது ரிக் வேதத்திலுள்ள மந்திரம், இது போன்றதே அவர்கள் வேத மந்திரங்கள் என்று சொல்லக் கூடியவைகள். கருப்புத்தோலுடையவன் சூத்திரன் என்பதற்குப் பிரமாணம்.

"ப்ராஹ்மணானாம் ஸிதோவர்ண
சூத்ராணா மஸிதஸ்ததா."

வெள்ளை நிறம் பிராமணன், கருப்பு நிறம் சூத்திரன், பொறாமையினாலும், சுகத்தினாலும் பார்ப்பார்கள் சண்டை போட்டாலும் அவர்கள் தெய்வம் உதவி செய்ய வேண்டும். அது அவர்கள் தருமம். "பொறாமை கூடாது அது பாவம், தன் சுகம் கூடாது, அது மோக்ஷத்தைக் கெடுத்துவிடும்" என்று மற்ற ஜாதிக்காரர்களுக்கு உபதேசிப்பார்கள்.

விடுதலைக்கு வழி காட்டும் அறிவுக்கதவை அடைத்து விடாத ஆங்கிலேய அரசாட்சியானதினால் மேற்சொன்ன மூன்று பேர்களும் நாக்கறு பட்டு தொண்டையில் ஆணி அடிக்கப்பட்டு சுட்டெரிக்கப்படாமலிருக்கிறார்கள். நமது நாட்டில் ஆங்கிலேய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் சிவில் சட்டத்தில் மனுதரும சாஸ்திர விதிகளில் சிலதைப் புகுத்தினார்கள். கிரிமினல்சட்டம்ஆங்கிலேயசட்டமாகவே யிருக்க வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் தீர்மானம் செய்து விட்டார்கள். ஆகவே மற்ற ஜாதிக்காரர்கள் உயர்வதிலுள்ள பொறாமையே குற்றம் காண்பதற்கும், தூற்றுவதற்கும் காரணமாக விருக்கிறது. பார்ப்பாரல்லாதார்கள் மேன்மை அவர்கள் வேத சம்மதமல்ல வருணாஸ்ரம தருமத்திற்கும், சனாதன தருமத்திற்கும் நேர் விரோதம். ஆனதால் பல தந்திரங்களினாலும், பொய்யாலும், கபடாலும் மற்றவர்களின் மேன்மையைக் கெடுப்பதே அவர்களுடைய வழக்கமாக விருக்கிறது. யாரையாவது மோசடி செய்து கெடுக்க வேண்டுமானால் தெய்வங்கள் கூட பார்ப்பார ரூபமெடுத்து வந்ததாகத்தானே புராணக் கதைகள் சொல்லுகின்றன. சில பார்ப்பாரல்லாதவர்களை மேன்மைப் படுத்துவதில்லையா என்றால் மேன்மையடைகிறவர்களைக் கெடுக்கத் தன் காடுபிறர் காடு தெரியாதவர்களையும், ஆலோசனை யற்றவர்களையும் தங்களுக்கு ஆயுதமாக உபயோகப்படுத்திக் கொள்ளச் செய்வார்கள். காரியம் முடிந்தவுடன் குப்பையில் ஒதுக்குவார்கள். இப்பொழுது குப்பையில் ஒதுக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். என்ன செய்வது? வேத சாஸ்திரம், கடவுள், குரு முதலியவைகளெல்லாம் அவர்களுக்கு சம்மதம் கொடுத்திருக்கிறது. உதவுகிறது, அதனாலே தான் அந்த வேதமும், அந்தக்கடவுளும் ஒழிய வேண்டுமென்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

# ஷண்முகத்தைப்பற்றி ‘ஸ்டேட்ஸ்மன்’ கூறுவது.

## சட்டசபைத்தலைவரின் தற்காப்பு.

### “பூரண யோக்கியதையுள்ள ஒரு நல்ல தலைவர்”

### இந்தியாவின் சிறந்த ஊழியர்கள் யார்?

### “மறுப்பு விதி செய்தவர்களும், தோல்விக்கீதம் பாடியவர்களும், அழிவுக்கூத்தாடியவர்களும் அல்ல”

“பிரசிடெண்டின் சவுக்கடி” என்ற பொருள்பற்றி “ஸ்டேட்ஸ்மன்” எழுதுகிறதாவது:—

இந்திய சட்டசபை இப்போது கலைந்து விட்டது. அதன் தலைவர் ‘பயங்கர’ மிருகங்களில் ஒன்று என்று சொல்லப் படுபவர். அந்த மிருகம் சிலருடைய கோபத்தையும், ஆவேசத்தையும் தூண்டிவிட்டது. அதன்பயனாக அவரைத்தாக்க முற்படுகின்றனர். “அவர் தாக்கப்படும்போது தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்வதில் என்ன விந்தை” காங்கிரஸ், தலைவரை எதிர்க்கும் விஷயத்தில் நேர்மையாய் நடக்கவில்லை. பிரிட்டனில் தலைவர் தொகுதிக்கு போட்டி கூடாது என்கிற ஒரு சம்பிரதாயம் அனுஷ்டிக்கப் படுகிறது. அந்த சம்பிரதாயத்தை ஒழுங்கற்ற முறையில் சிலர் மறுக்கப்பிரயாசைப் படுகிறபோதிலும்அந்த சம்பிரதாயத்தின் உயர்வை யாவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். மேலும், ‘சர். ஷண்முகம் தலைவர் பதவிக்கு பூரண யோக்கியதைஉடைய ஒரு நல்ல தலைவர் என்று காங்கிரஸ்காரர்கள் உட்பட பலதிறப்பட்ட அரசியல் வாதிகள் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகும். சர். ஷண்முகம் தலைவர் பதவியின் போது, சட்டசபை மெம்பர்களாய்வந்தவர்களில்,ஏன்? இவருக்கு முன்னிருந்த தலைவர்கள் காலத்தில் மெம்பர்களாய் வந்தவர்களிலும் கூட ஒருவராவது சர். ஷண்முகத்தின் அபார அரசியல் ஞானம், சட்ட நிபுணத்துவம் ஆகியவைகளின் பக்கத்தில் கூட நெருங்கவே முடியாது. ஒருகால் சட்டப்பிரிவில் உத்தியோகம்பார்க்கும் சட்டக்காரியதரிசிகள் நெருங்கினால் நெருங்கலாம். அவருடையமனோதிடமும், தீர்ப்புத்திறமையும், விஷயங்களை தெற்றென விளக்கிக்காட்டுந்திறமையும் அபாரமென்றே சொல்லலாம். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அவரை எதிர்க்க முடிவு செய்தது மேற்சொன்ன அவரின் திறமைகளில் பழுது இருப்பதாகக் கண்டு அல்ல என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் எல்லாத்தொகுதிகளிலும் வெற்றி பெற்று சட்டசபைக்குச்செல்வதாக வேவைத்துக் கொள்ளுவோம். தலைவர் நியமனத்தைத் தங்கள் இஷ்டப்படிக்கு செய்யக்கூடிய அளவுக்கும் பலம் பெற்று விட்டதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போது சர். ஷண்முகத்தைப்போல் திறமை வாய்ந்த ஒருவரை தலைவர் ஸ்தானத்திற்கு நிறுத்த முடியுமா வெனக் கேட்கிறேன். காங்கிரஸ் இத்தக்கேள்விகளுக்கு யோக்கியமாக பாசாங்கு செய்யாமல் பதில் சொல்லட்டும். காங்கிரஸ் சார்பாக சட்டசபைக்கு அங்கத்தினர்களாகப் போகப் போகிறவர்கள் எல்லோரும் சட்டசபைக் குப்புதியவர்கள். இதற்கு முன் ஒரு போதும் சட்டசபை முகத்தையே பார்க்காதவர்கள். தலைவர் ஸ்தானத்திற்கு அபேட்சகராக இப்படிப்பட்டவர்களில் ஒருவரைத் தான் காங்கிரஸ் நிறுத்த முடியும். இவருக்கு மற்ற விவகாரங்களில் அளவுக்கு மீறிய அனுபவம் இருக்கலாம். ஆனால் அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு சட்டசபையில் என்ன செய்வது? பாவம்! அவர்தான் என்னசெய்வார்!! இதற்கு முன் சட்ட சபை சென்றாரா? அங்கே போனதே இல்லை என்றால் சட்ட சபையில் பேசுவது எங்கே? ஆகவே, இப்படிப்பட்டவர் சட்டசபையில் நடக்கும் தர்க்கங்களை நடத்துவதில் யோச்யதையற்றவராவார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? சர் ஷண்முகம் நேர்மையாகத் தெரிந்தெடுக்கப்பட்டு சட்டசபைக்கு மறுபடியும் செல்லுவாரானால் (அவர் செல்லப்போவது நிச்சயம்) அவர் மறுபடியும் தலைவர் ஆவதற்கு அஸம்பிளியில் பலத்த எதிர்ப்பு ஒன்றும் இருக்காதென்றே நாம் உண்மையில் எதிர்பார்க்கிறோம். இப்படிப்பட்டவர் எதிர்க்கப்படுவதைக்கண்டு பரிதாபப்படுகிறோம். இவருடைய ஸ்தானத்திற்கு முக்கியமாக போட்டி போடமுடிவு செய்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. பழங்காலத்துப்பகைமையும், பொறாமையுமே அந்தக்காரணமாய் இருக்கலாமென யூகிக்கிறோம்.

முன்னொரு காலத்தில் இதே சர் ஷண்முகம் பிடிவாத குணம் படைத்த காங்கிரஸ் கக்ஷியின் ஜீவ நாடியாக அதுவும் போதாது, காங்கிரஸுக்கு கொழு கொம்பாகவும்விளங்கியவர் அப்போது காங்கிரஸ் சட்டசபை பகிஷ்காரத் தீர்மானம் செய்தது. அத் தீர்மானத்தின் படியே பலரும் சட்டசபையை விட்டு வெளியேறியும் விட்டனர். ஆனால் ஷண்முகமோ சட்டசபை பகிஷ்காரத் தீர்மானம் முழு முட்டாள் தீர்மானமெனச் சாற்றி சட்டசபையிலிருந்து விலகமறுத்தார். காங்கிரஸ்காரர்களுக்கு அது பிற்போக்கான தீர்மானமென்று சொல்லவும், உணரவும் இன்றுதான் தைரியமும், அறிவும் பிறந்திருக்கிறது. அந்தக்காலத்தில் சுயராஜ்யக்கக்ஷி இல்லையாதலால் அவர் எதிர்க்கட்சியில் சேர்ந்து அரசாங்கத்தை திணரச் செய்தார். அவர் அஸம்பிளியிலிருந்து வெளியேறாததற்காக வெளியேறினவர்கள் அவர் மேல் பாடின வசைபுராணம் கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தபோதிலும், சர் ஷண்முகம் முன்பு எப்படி தேசிய வாதியாகவும், தேச பக்தராகவும் விளங்கினரோ அதே போல்தான் இன்னும் விளங்கி வருகிறார். அதிலிருந்து ஒரு இம்மியளவேனும் பிரளவில்லை என மார்தட்டிச் சொல்லுவோம். காங்கிரஸ் கண்களுக்கு அவர் செய்த குற்றங்களில் தலை சிறந்த குற்றமாகக் காணப்படுவது ஆட்டாவா ஒப்பந்தமாகும். அவர் இந்திய சட்டசபைத் தலைவராவதற்கு முன், காங்கிரஸ்காரர்கள் செய்துவருவது போல் தங்களால் ஒன்றும் செய்யத் திறமையில்லாமல் ஒத்துழையாமை என்ற போர்வையில் புகுந்துகொண்டு எல்லா விவகாரங்களையும் அதிகார வர்க்கத்தினரே செய்யவிட்டு விட்டு பிறகு அதனால் வரும் பலா பலன்களை மட்டும் கால், தலை தெரியாமல் கண்டிக்க மாத்திரம் தயாராய் இருப்பது போலல்லாமல், சர். ஷண்முகம் ஆட்டாவா மகாநாட்டின் அழைப்பிற்கிணங்கி அதைத் தனது கடமை எனக்கொண்டு அம் மகாநாட்டில் தாய் நாட்டிற்காகப் போராடினார். காங்கிரஸ்காரர்களின் வழக்கமான தூற்றல் சர்.ஷண்முகத்தை அசைக்க முடியவில்லை. அவர் ஒருஸ்வராஜிஸ்ட் மட்டுமல்லஅகில.இந்தியா வியாபார சங்கத்தின்கமிட்டிமெம்பருமாவார்

ஆட்டாவாஒப்பந்தத்தினால் கிரேட் பிரிட்டனை விட இந்தியாவிற்குத் தான் பெருத்த இலாபம் என்பதை தெற்றென புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டினார். என்ன சொல்லிய போதிலும் காங்கிரஸ் இன்று வரை தன்னுடைய பழைய (வசை பாடும்) வழக்கத்தை விட்டதாகக் காணோம். “அந்த ஒப்பந்தத்தால் அவர் இந்தியாவைக் காட்டிக்கொடுத்து விட்டார் என்ற பாசாங்குக் கூச்சலை காங்கிரஸ்காரர்கள் போட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். யார் என்ன சொன்னபோதிலும் சர் ஷண்முகம் பலமான அஸ்தி வாரத்தின் மேல் நிற்கின்றார். உண்மை அவர் பக்க மிருக்கிறது. பொய் புரட்டுகள் உண்மையை எவ்வளவு காலம் மறைத்து நிற்கும்? ஆட்டாவா ஒப்பந்தத்தினால் இந்தியா அடைந்த நற்பலனை பிரத்தியக்ஷமாக மக்களுக்கு எடுத்துக்காட்டப் போகிற காலம் வெகு விரைவாக சர். ஷண்முகத்தை நாடி வந்து கொண்டிருக்கிறது. மேலும் மேற்படி ஒப்பந்தத்தினால் யார் லாபமடையப் போகிறார்களோ அவர்களே பொய்ப் பிரசாரத்தின் மூலம் சம்பிரதாயச் சட்டங்களை மறுக்கப் பார்க்கும் கக்ஷிகளுக்குப்புத்தி கற்பிப்பது நலமென அபிப்பிராயப் படுகிறோம்.

சர். ஷண்முகம் அவர்களை எதிர்க்க முடிவு கட்டி விட்டவர்களின் உள் எண்ணம் எதுவாய் இருந்தபோதிலும் எதிர்ப்பு ஆரம்பித்து விட்டார்களென்பது நிச்சயம். தன்னைப்பிறர் எதிர்க்கும்போது அந்தக் ‘கொடிய மிருகம்’ சும்மாவா இருக்கும். மிகத் திறமையாக அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுகிறார்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எதிர்ப்புக்கு எதிர்ப்புத்தான் சிறந்த வழியெனக்கண்டார். இப்போது அவர் சட்டசபைத்தலைவர் அல்ல ஆகையினாலும், அவரை மறுபடியும் தலைவர் பதவிக்கு வரவொட்டாமல் செய்வதற்காகச் சூட்சிகள் செய்யும் கூட்டத்தாரோடு போர் செய்யவேண்டியிருப்பதாலும், தன்னுடைய எதிரிகளின் குட்டுகளை வெளிப்படுத்த யாதொரு தடங்கலுமின்றி வெளிக் கிளம்பியுள்ளார். இது ஒரு விதத்தில் அவ்வளவு முக்கியமல்லவென்று தெரிகிற போதிலும், மற்றொருவிதத்தில் பார்க்கப் போனால் மிகவும்முக்யமும், அவசியமுமென்றே தெரிகிறது.

உண்மையைக் கூறுமிடத்து ‘காங்கிரஸ்காரர்கள் மட்டுந்தான் தேசபக்தர்கள், தேசிய வாதிகள். மற்றவர்கள் எல்லோரும் தேசத்துரோகிகள்’ என்னும் ஆணவப்பேச்சை அடிமாள வைக்கவே சர். ஷண்முகம் முற்பட்டிருக்கிறார்.எப்படி ஒருவன் காஷாயம் தரித்துக் கொண்டதினாலேயே ஞானியாய் விடமுடியாதோ அதேமாதிரி ஒருவன் கதர் கட்டிக் கொண்டதினாலேயே நான்கணாவைப்பின் பற்றும் தேசத்தலைவன், ‘தியாகி’ ஆகிவிட முடியாது. காங்கிரஸ்தான் தேசாபிமானிகள் நிறைந்த ஸ்தாபனம் என்று சொல்லப்படுவதையும், இந்திய மக்களின் பிரதிபிம்பந்தான் காங்கிரஸ் என்று சொல்லப்படுவதையும், சுய அறிவும், யோசிக்கும் சக்தியும் படைத்த மனிதர்கள் முழுப்புரட்டெனவே எண்ணுவார்கள்.

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# கோவையில் தோழர்கள் Dr. வரதராஜுலு, ஈ. வெ. ராமசாமி.

# 6000—7000 ஜனங்கள் பிரமமாண்டமான கூட்டம்.

## காலித்தனம் ஏமாற்றமடைந்தது.

## வட்டியுடன் திருப்பிக்கொடுக்கப்பட்டது'

### கேள்விகளுக்குப் பின்தான் காங்கிரஸ் வண்டவாளமும், பார்ப்பன சூழ்ச்சியும் வெட்டவெளிச்சமாக்கப்பட்டது. அதன் பயனைய் கேள்வி கேட்டவர்களே பார்ப்பனர்கள் வைதார்கள்.

### மீட்டிங்கில் கலகம் என்பதும், கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்பதும் பார்ப்பன நிருபர்களின்—பத்திரிகைகளின் வடிகட்டின அயோக்கியத்தனமே யொழிய உண்மையல்ல.

கோவையில் டவுன் ஹால் மைதானத்தில் 12-10-34ந்தேதி "சட்டசபைத்தேர்தல்" என்னும் விஷயமாக ஒரு சொற்பொழிவாற்றத் தோழர்கள் பழனிச்சாமி நாயுடு, பரமேஸ்வரன் செட்டியார் ஆகியவர்களால் நோட்டீஸ் அச்சிட்டு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அந்தப்படி கூட்டம் $6\frac{1}{4}$ மணிக்குக் கூடுமென்று தெரியப்படுத்தியிருந்தும் $5\frac{1}{2}$ மணி முதலே ஏராளமான ஜனங்கள் வந்து சுமார் 6000, 7000 பேர்களுக்கு மேற்பட்ட பிரமாண்டமான கூட்டமாகக் கூடிவிட்டது.

தோழர்கள் வரதராஜுலுவும், ராமசாமியும் சரியாக $6\frac{1}{2}$ மணிக்கு வந்து சேர்ந்தார்கள். உள்ளூர்ப்பிரமுகர்கள், காங்கிரஸ், ஜஸ்டிஸ் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வந்து கூடியிருந்தார்கள். பொப்பிலி ராஜா அவர்கள் விஜயத்திற்காக ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் தோழர் ராமதாஸ் பல பாட்டுகள் பாடிய பின் தோழர் பாலகிருஷ்ணனால் பிரேரேபிக்கப்பட்டு தோழர் சங்கரலிங்கம் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தோழர் ஈ. வெ. ராமசாமி பெருத்த நீண்ட கரகோஷத்தினிடையே தலைமைவகித்தார். உடனே பலர் இருவருக்கும் மாலை சூட்டினார்கள்.

தோழர் ராமசாமி அவர்கள் கூட்டத்தின்காரணத்தையும், அவசியத்தையும் எடுத்துச் சொல்லுகையில் பேசியதாவது:—

தோழர்களே! இன்று இந்தியாவெங்கும் பல தாங்களில் கிளர்ச்சிகளும், முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில் இப்போது மிகவும் விளம்பரமாய்க்காணப்படுவது இந்தியசட்டசபைத் தேர்தல்களாகும். அது விஷயமாய் பல கட்சிக்காரர்களும், பலவித அபிப்பிராயக்காரர்களும் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பதால் அவரவர்கள் அபிப்பிராயங்களைப் பொது ஜனங்களுக்குச் சொல்லி ஓட்டுகள் கேட்கவோ, அல்லது எந்தப்படி சொன்னால் பொது ஜனங்கள் ஓட்டுகள் தங்களுக்குக் கிடைக்கு மென்று கருதி அதின்படி பேசி ஓட்டுக் கேட்கவோ ஆனகாரியங்களை அபேக்ஷகர்கள் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் எப்படிப்பட்ட நியாயமான, யோக்கியமான கொள்கைகள் கொண்ட அபேக்ஷகரும் ஜனங்களிடையில் வந்து தங்கள் அபிப்பிராயங்களையும், நிலைமைகளையும் சொல்லித் தீரவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டுவிட்டது.

அதனாலேயே தோழர் வரதராஜுலு அவர்கள் இன்று இங்கு இந்திய சட்டசபைத் தேர்தலுக்குத் தான் நிற்பதைப்பற்றியும், உங்கள் எல்லோருடைய ஆதரவும் தனக்கு வேண்டும் என்பதைப்பற்றியும் தெரிவித்துக்கொள்வார். விஷயங்களைப் பொறுமையுடன் கேட்டு நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பார்த்துத் தங்களுக்குத் தோன்றுகின்றபடி செய்யுங்கள் என்று சொல்லித்தோழர் வரதராஜுலுவைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

#### டாக்டர் நாயுடு.

தோழர் வரதராஜுலு அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து நின்று பேசியதின் சுருக்கம்.

தோழர்களே!

இந்திய சட்ட சபைத்தேர்தலுக்குப்பல அபேக்ஷகர்கள் நிற்கிறார்கள். நான் சட்டசபைக்குக் காங்கிரஸின் சார்பாக நிற்கவேண்டும் என்று தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் முதலில் என்னைக் கேட்டார். நான் 1929ளு முதல் காங்கிரசிலிருந்துவிலகி இருக்கிறேன் என்று சொல்லி விட்டேன்.

தோழர் சித்தரஞ்சன தாஸ் சட்டசபைக்குப் 'போகவேண்டும் என்று கூறிவந்தபோது, அது கூடாது என்பதாகவும், சட்டசபைக்குப் போகிறவர்கள் தேசத்துரோகிகள் என்பதாகவும் கூறப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுதோ காங்கிரஸ் சார்பாகப் போகாதவன் "தேசத்துரோகி" "அயோக்கியன்", என்று கூறப்பட்டு வருகிறது. நல்லவர்களும், கெட்டவர்களும் எங்கும் இருக்கலாம். இனிமேல் நாம் சுயராஜ்யமடைய வேண்டுமென்றால், முன் செய்ததைவிட இன்னும் 10 மடங்கு அதிகமாகத் தியாகம் செய்யத்தயாராய் இருக்க வேண்டும், இப்போது நமக்குள் ஒற்றுமை குலைந்து விட்டது, முஸ்லீம்கள் காங்கிரசில் அதிகம் இல்லை. (இந்தச் சமயத்தில் ஒரு வாலிபர் டாக்டர் அன்சாரி, கிச்சிலு, அசாத் இருக்கிறார்கள் என்றார். இந்த சமயத்தில் ஜனங்கள் அவரை அடக்கினார்கள். பெருத்த கூட்டமானதால் அந்த ஆளைப்பார்க்கப்பலர்எழுந்தார்கள். தோழர் சுப்ரி மேடை ஏறி காங்கிரஸின் பெயரைக் கெடுக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டார்.) கட்டு திட்டம், ஏற்படவில்லை. நல்ல ஓர் திட்டம் ஏற்பட-வேண்டுமென்றாலும் தேச பக்தர்கள் திரள வேண்டுமென்றாலும்; ஒருக்கால் புதிய அரசியல் திட்டம் ஏற்பட்ட பிறகுதான் சாத்தியமாய் இருக்கலாம். நல்ல சேவை செய்யக்கூடியவர்களையும், தேசாபிமானிகளாய் இருப்பவர்களையும் சட்டசபைக்கு அனுப்புவது சரிதான். ஆனால் இந்தக் கட்சியின் பேரில்தான் போகவேண்டும் என்று கூறுவது சரியல்ல. காங்கிரஸ் சட்டசபைக்குள் என்ன காரியத்தைச்செய்யப் போகின்றதோ, அதே காரியத்தைத்தான் நானும் செய்யப்போகிறேன். சர்க்காரை எதிர்ப்பதில் நான் காங்கிரஸ்காரர்களை விடப் பின் வாங்கினவன் அல்ல. ஆனால் தற்சமயம் இருக்கும் நிலைமையில் சட்ட சபையில் முட்டுக்கட்டை ஒன்றும் போடமுடியாது என்றும் சொல்லிவிட்டேன்.

### சட்ட சபையில் மடக்குவது சாத்தியமில்லை.

143 பேர்கள் இந்திய சட்ட சபையின் மொத்த மெம்பர்கள். 43 ஸ்தானங்கள் நியமன அங்கத்தினர்களுக்கும், இன்னும் சில ஸ்தானங்கள் விசேஷ அங்கத்தினர்களுக்கும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. மீதியுள்ளது சுமார் 70 ஸ்தானங்கள்தான் தேர்தலுக்கு விடப்படுகின்றன. தேசபந்து சி. ஆர். தாஸ் இருக்கையில், அவரது கட்சிக்கு சட்டசபையில் 39 அங்கத்தினர்கள் இருந்தார்கள். அவர்களோ என்னென்ன வேலைகளையோ செய்வதாகச் சொல்லிச் சென்ற போதிலும் ஒன்றும் பிரயோஜனப்படாமற் போகவே 1926ஞு சுயராஜ்யக் கட்சியார் வெளிவந்து விட்டார்கள்.

இப்போதும் காங்கிரஸ் சட்ட சபைக்குச் சென்று வெள்ளை அறிக்கையை நிராகரித்துவிட முடியாது; ஆனால் சட்ட சபையில், ஏதோ சில சில்லரைக் காரியங்களைத்தான் செய்யலாம். வரியைக் குறைப்பதற்கும், உயர்ந்த சம்பளங்களைக் குறைப்பதற்கும் இவை போன்ற சில விஷயங்களைத்தான் செய்ய முடியுமேயொழிய வேறு அதிகமாக ஒன்றும் செய்யமுடியாது. வேலையற்றோர்களுக்கு கூடுமான உதவியும், வெளிநாட்டு இந்தியர்கள் விஷயமாகவும் சிறிது கவனிக்கலாம். இதுதான் எனக்கும், காங்கிரஸுக்கும் உள்ள வித்தியாசம்.

### காங்கிரஸில் புதுக் கட்சி.

1922ஞு நான் வரி கொடுக்கவில்லை. அதற்காக சர்க்கார் பூமியையும், மோட்டாரையும் எடுத்துக் கொண்டார்கள். இருந்தும் என்ன? சர்க்காரால் மோட்டாரையாவது, பூமியையாவது விற்பதற்கு முடியவில்லை. ஏலத்தில்ஒருவரும் எடுக்க முன்வரவில்லை. ஜனங்களிடம் எப்போதும் அதேமாதிரியான பலம் இருக்கும் என்று நம்புவதற்கில்லை அது நீடித்திருப்பது சிறிது கஷ்டம்தான். இப்போது காங்கிரஸில் கட்சிச் சண்டைகளும், பிளவுகளும் ஏற்பட்டு வந்திருக்கின்றன. காங்கிரஸில் இப்போது தொழிலாளர்களுக்கு ஏற்றதான ஓர் கட்சி ஏற்பட்டிருக்கிறது இது ஒரு புதுக் கட்சி. இந்தக் கட்சியினர் காங்கிரசைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். காங்கிரஸில் இருந்து வந்த தோழர் தேவதாஸ் விலகி வேறு வேலைக்குப்போய்விட்டார். மகாத்மா காந்தியும் விலகுவதாக தீர்மானித்திருக்கிறார். காங்கிரஸ் செய்யப் போவதை நான் செய்யமாட்டேன் என்று நினைப்பதற்குக் காரணமே இல்லை. 25 வருஷங்களாக நான் தேச சேவை செய்து வந்திருக்கிறேன். ஜனங்களுக்கு விரோதமாக நான் ஒரு சமயமும் நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. எனவே நான் கூறும்விஷயங்களை நன்கு கேட்டு பின்பு உங்கள் ஓட்டைக் கொடுங்கள்.

இந்தத்தொகுதிக்கு 25000 ஓட்டர்கள் வரைஇருக்கிறார்கள். நான் சொல்லுவது சரியென்று இருக்கும் பக்ஷத்தில் நான் வெற்றியுறுவேன். இல்லையென்றால் காங்கிரஸ் வெற்றிபெறும். இனி நடைபெறப்போகும் சட்டசபைத்தேர்தல்களில்ஒருஸ்தானத்திற்கு8பேர்10பேர்போட்டி போடுவார்கள். நான் உங்களுடைய ஆதரவைப் பெற்றவன். யார் கூறுவதையும் பொறுமையாகக் கேட்கப்பயில வேண்டும். புதிய அரசியல் திட்டம் வந்தபிறகு சட்டசபைப் பிரவேசத்தை காங்கிரஸ் ஆதரித்திருக்க வேண்டும். இனிமேல் சமதர்ம கட்சியின் கொள்கைகளுக்குத்தான்நாட்டில் மதிப்பு ஏற்படும். சமதர்மவாதிகள் காங்கிரசைக்கைப்பற்றினால் நானும் கூட. காங்கிரசில் சேர்ந்தாலும் சேரக்கூடும். நான் கோவைக்கு தேர்தல் விஷயமாக முன்பே வந்திருக்க வேண்டும். என்றாலும், வராததற்குக் காரணம் கோவை என்னுடைய பழைய ஊர். ஆனதால் நான் இப்போது வந்திருக்கிறேன்.

என்று பேசிமுடித்தார்.

### தோழர் ராமசாமி.

அக்கிராசனர் முடிவுரையாக,

1½மணி நேரம் பேசியதாவது.

தோழர்களே!

நான் ஒரு தேசாபிமானியல்ல. அதுமாத்திரமல்லாமல் தேசாபிமானத்தைப்புரட்டுஎன்றும், அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்றும், சொல்லியும், எழுதியும் வரும் "தேசத்துரோகி" யாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச்சிறைசெல்லும்படியான அவ்வளவு தேசாபிமானியாய் இருந்து பலமுறை சிறைசென்றும் வந்துதான் அதன் அனுபவத்தைச் சொல்லுகிறேனே ஒழிய வெளியில் இருந்து வேடிக்கை மாத்திரம் பார்த்து விட்டு நான் இப்படிச்சொல்ல வரவில்லை.

### தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது.

இதனால் பாமர மக்கள் தூஷணைக்கும், பழிப்புக்கும் கூட ஆளாகியிருக்கிறேன். என்றாலும் எனது உறுதியான எண்ணத்தை நான் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

"நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச்சுமக்கும் வேலை போகாது" என்பது தான் தேசாபிமானிகளின்—மகாத்மாக்களின் சுயராஜ்ய தர்மமாகும். இந்தச்சுயராஜ்யம்வருவதை விட இப்போது இருக்கும் பராராஜ்யமே மேலானது என்பது எனது கருத்து.

இன்றைய பராராஜ்யத்தில் தோட்டி புல்லுச் சுமக்கும் வேலையைவிட்டு மந்திரி வேலை செய்தாலும் செய்யக்கூடும்.

ஆனால் அவனவன் ஜாதித்தொழிலையும்,பாரம்பரைப்பெருமையையும், பழக்க வழக்கங்களையும் காப்பாற்றும் காங்கிரஸ் சுயராஜ்யத்தில் தோட்டிக்குப் புல்லுச்சுமப்பதை விட வேறு தொழில் ஏற்பட முடியுமாஎன்று யோசித்துப் பாருங்கள். இந்தக்காரணத்தினால் தான் நான் தேசத்துரோகியாக இருக்கிறேன். சுயராஜ்யத்துக்கும் விரோதியாக இருக்கிறேன். ஆனால் பார்ப்பார ஜாதியையும், பறை ஜாதியையும் அழித்து எல்லோரும் சரிசமமான மனிதர்கள் என்று ஆக்கும் தேசாபிமானத்துக்கும், சுயராஜ்யத்துக்கும் நான்விரோதியல்ல— துரோகியுமல்ல என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

நான் இந்திய சுயராஜ்யம், இந்திய தேசாபிமானம் என்பதைப் பற்றி மாத்திரம் பேசுவதாக நினைத்து விடாதீர்கள். உலகத்தில் உள்ள எல்லாதேசங்களின் தேசாபிமானங்களையும், சுயராஜ்யங்களையும் கண்டும், தெரிந்தும் தான் பேசுகிறேனே ஒழிய கிணற்றுத் தவளையாய் இருந்தோ, வயிற்றுச் சோற்றுச் சுயநல தேச பக்தனாயிருந்தோ நான் பேச வரவில்லை.

எந்தத் தேசத்திலும் எப்படிப்பட்ட சுயராஜ்யத்திலும், குடியரசு நாட்டிலும் ஏழை—பணக்காரன், முதலாளி,—தொழிலாளி வித்தியாசம் இருந்து தான் வருகின்றது. நம் நாட்டில் இவைகள் மாத்திரமல்லாமல் பார்ப்பான்—பறையன், மேல்ஜாதி—கீழ்ஜாதி ஆகிய அர்த்தமற்ற அயோக்கியத்தனமான வித்தியாசங்களும் அதிகப்படியாய் இருந்து வருகின்றன.

இவைகளை ஒழிக்கவோ, அழிக்கவோ இன்றைய தேசாபிமானத்திலும், சுயராஜ்யத்திலும் கடுகளவாவது யோக்கியமான திட்டங்கள் இருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கின்றேன்.

உலகத்திலேயே மேம்பட்ட செல்வச் செருக்குள்ள நாடான அமெரிக்க நாட்டிலேயே 2 கோடி பேர்களின் குடும்பங்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனவென்றால்-உலகத்தில் சூரிய அஸ்தமனமில்லாத பிரிட்டிஷ் சுயராஜ்ய இங்கிலாந்தில் 20 லட்சம் பேர்களின் குடும்பங்கள் வேலையில்லாமல் பட்டினி கிடக்கின்றனவென்றால் சுயராஜ்ய ஜனநாயக ஆட்சிக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும். பிரான்சு குடியரசின் யோக்கியதைக்குப் புதுச்சேரியைப்பார்த்துக் கொள்ளுங்கள். இந்திய மக்களுக்குள்ள குறைகள் அங்கும் உண்டு.

சுயராஜ்யமுள்ள சுதேச சமஸ்தானங்களை எடுத்துக்கொள்ளுங்கள். பிரிட்டிஷ் இந்தியா சின்னக் கருப்பனால் சுதேசசமஸ்தான இந்தியா பெரிய கருப்பனாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட தேசாபிமானம், சுயராஜ்யாபிமானம் என்கின்ற சூட்சிகளையும், தந்திரங்களையும் விட்டுவிட்டு மனித ஜீவ அபிமானமென்கின்ற தலைப்பின் கீழும், கொள்கையின் கீழும் எல்லோரும் ஒன்று சேருகின்றவரையில் நான் "தேசத்துரோகி"யாயிருந்து தேசாபிமானப் புரட்டையும், சுயராஜ்யப் புரட்டையும் வெளியாக்காமல் இருக்க முடியாது.

### காங்கிரஸ்.

காங்கிரசைப்பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகின்றது.

காங்கிரசின் பயனாய் இந்த 50 வருஷ காலமாய் பாமர மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டதென்று விரல் விட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன்.

முதலாவது காங்கிரஸ் எல்லா ஜனங்களுக்கும் பிரதிநிதியாய் இருக்கின்றதாவென்றும் கேட்கின்றேன்.

வட நாட்டில் முஸ்லீம்கள் காங்கிரசுக்கு விரோதமாய் முஸ்லீம் லீக் வைத்துக்காங்கிரசை கண்டித்துவருகிறார்கள். பெரும் பான்மையான 100-க்கு 90 முஸ்லீம்கள் காங்கிரசில் இல்லை.

தோழர் வரதராஜுலு காங்கிரசை முஸ்லீம் சமூகம் ஒப்புக் கொள்ளவில்லை என்றதற்கு ஒரு வாலிபர் தோழர்கள் டாக்டர் அன்சாரி, கிச்சுலு, அபூல்கலாம் அசாத் ஆகியவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னார். இவர்கள் பேச்சைக் கேட்கும்முஸ்லீம்கள் யார்?

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# தனி உடைமை உலகில் அந்தமுறையில் நடைபெற்று வருகிற பொருளாதாரத்தின் தன்மை.

## கொடிய முதலாளித்துவ முறையில் ஏற்பட்ட பயங்கரமான வறுமை.

### அக்கிரமமான முறையை உலக சுபாவம் எனக்காண்பிக்கும் மதங்கள்!

(கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உலகில் புத்தம் புதிய வாழ்க்கையை அமைக்கும் நவீன முறை.

அரசியல் பிரச்சினை, பொருளாதார பிரச்சினை, மனித உரிமை முதலிய பிரச்சினைகளைப்பற்றி சத்தியமான முறையில் விசாரித்துணர்ந்து மனித வர்க்கத்திற்கு நன்மையையும், முன்னேற்றத்தையும், சாந்தியையும், சமாதானத்தையும் கொடுக்கக் கூடிய வழியை கண்டுபிடிக்க முயன்றவர்கள் மேனாட்டு அறிஞர்கள்தான். மேனாட்டு அறிஞர்களில் மேற்காட்டிய பிரச்சினைகளைப்பற்றிய சத்தியத்தை விடா முயற்சியுடன் ஆராய்ந்து நுட்பமாகக்கண்டு பிடித்தவர் ஜர்மனியில்பிறந்த கார்ல்மார்க்ஸ் என்னும் மெய்ஞ்ஞானியே. கார்ல்மார்க்ஸ் என்னும் இப்பெரியார் தான் புஸ்தகவாயிலாய் ஏழைகளின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்துவைத்தவர். அவரால் எழுதப்பட்ட (Capital) கெபிடல் என்னும் புத்தகத்தில் (முதலாளித்துவத்தின் வரலாற்றை ஆதியோடந்தமாக எடுத்துக்காட்டி) முதலாளித்துவத்தை அழித்து (Socialism) சோஷியலிஷமுறைப்படி மனித சமாஜத்தை ஏற்படுத்த வேண்டியதை விளக்கியுள்ளார். விளைபொருள், செய்பொருள் முதலிய செல்வங்களை விநியோகிக்கப்பட வேண்டிய முறையெல்லாம் இச் சோஷியலிசம் எடுத்துக்காட்டுகின்றது. மார்க்ஸ் இச்சோஷியலிசத்தை ஒரு தேசத்திற்கேனும், ஒருசமூகத்திற்கேனும், ஒருஜாதிக்கேனும்— தனிப்பட்ட முறையில் எடுத்துப் பேசவில்லை—அவரிந்த அகில உலகத்தோருக்கும் அதை (சோஷியலிசத்தை) பொதுவாகக் கொடுத்துள்ளார். மார்க்ஸ் எத்தகையவர் என்றால் அவர் உலக முதலாளித்துவத்தை ஒழித்து சோஷியலிசத்தை ஏற்படுத்தவே பிறந்தார்! அதற்காகவே ஆரம்பமுதல் இறுதிவரை பாடுபட்டார்!! அதற்காகவே உயிர் துறந்தார்!!! என்றுதான் சொல்லலாம்.

### செல்வத்துக்குச் சொந்தக்காரன் உழைப்பாளியே.

சோஷியலிசப்படி உலக செல்வத்திற்கு சொந்தக்காரர் உழைப்பாளிகளே. ஏனெனில் உலகிலுள்ள எல்லாச் செல்வங்களும் உழைப்பாளிகளாலேயே உண்டு பண்ணப்படுகின்றன. உலக செல்வம் அதை உண்டு பண்ணினவனுக்குச் சேர வேண்டியதாக இருக்க 'முதலாளித்துவம் என்னும் அநியாய முறையால் செல்வம்முதலாளிகளென்னும் கொள்ளைக் கூட்டத்தார்களுக்குச்சேர்ந்து வருகின்றன. மனிதவர்க்கம் உபயோகிக்கும் எல்லாபொருள்களும் உழைப்பின் பயனே! உழைப்பே செல்வம்!! உழைப்பே விலை!!! ஆகையால் உழைப்பாளிகளின் ஆதிக்கத்தின் (ஆட்சியின்) கீழ்தான் இந்த உலகமே நடைபெற வேண்டும். இதன் கீழுள்ள எல்லாச் செல்வமும் எல்லோருக்கும் ஒன்று போல் ஏற்றத்தாழ்வின்றி சமமாகசமதர்மப்படி விநியோகிக்கப்படவேண்டும். இந்தசமதர்மப்படி(சோஷியலிசப்படி)உலகம் நடைபெற்று வருமேயாகில் எல்லோருக்கும் உணவும், ஆடையும், இருப்பிடமும், வைத்தியமும், போக்கு வரத்து சாதனமும், கல்வியும் கிடைக்கும். உலகில் வறுமையென்பதைக்காண முடியாமல் போய்விடும், உயர்வு தாழ்வு ஒழியும். அவமரியாதை அழியும், கொலையும், களவும், கொள்ளையும், விபச்சாரமும், தற்கொலையும், சூதும், வாதும், போரும் யுத்தமும் ஒழியும் உலகமே சாந்தியாயும் சமாதானமாயும் திகழும். ரஷியாவில் லெனின் என்னும் பெரியார் புதிய ரஷியாவை இந்த சோஷியலிசப்படி தான் அமைத்தார் இன்று ஸ்டாலின் அதன்படிதான் வெற்றியுடன் நடத்தி வருகிறார். சோஷியலிசப்படி ஏற்படுத்தியிருக்கும் சோவியத் ரஷியா (V. S. S. R.) வின் வெற்றியையும்,முன்னேற்றத்தையும்கண்டு முழு உலகமக்களும் இது என்ன புதுமை என்று ஆச்சரியப்படுகிறார்கள். அது இன்று முழுஉலகத்திற்கும் வழிகாட்டும் லோக குருவாக திகழ்கின்றது. நாம் இப்போது குர்ஆன், பைபில், புராணம் இதிகாசம் எல்லாவற்றையும்விட சோஷியலிசத்தை ஏற்றுக்கொள்வது பாபமாகாது சோஷியலிசம்தான் பாதாளத்தில் விழுந்து கரையேற வழியற்றிருக்கும் ஏழைமக்களை கரையேற்றும். காப்பாற்றும் இப்போது இச் சோஷியலிசம்முதலாளித்துவ உலகமெங்கும் காட்டுத்தீப் போல்பரவிக் கொண்டு வருகின்றன.

### சோஷியலிசத்தை நசுக்கி வருகிற முதலாளித்துவ உலகம்.

இச் சோஷியலிசம் பரவிக்கொண்டு வரும் வேகத்தை கண்டு பீதியடைந்த முதலாளித்துவ உலகம் (Capitalist world) அதைத் தடுக்க பலவித கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றன.

சமீபத்தில் ஜர்மனி யெங்கும் சோஷியலிசம் பரவி பார்லிமெண்டில் அது வெற்றியடையக் கூடிய சந்தர்ப்பத்திலிருந்து கொண்டிருந்தது. அச் சமயத்தில் முதலாளிகள் எல்லாரும் சேர்ந்து ஹிட்லர் என்னும் போர் வீரனுக்கு செல்வத்தை அள்ளிக் கொடுத்து இதை (சோஷியலிசத்தை) நசுக்கி விடும்படி ஹிட்லரை தூண்டினார்கள். முதலாளிகளின் உதவி கிடைப்பதைக் கண்ட ஹிட்லர் தான் முஸோலினி போன்று ஒரு பெரிய மனிதனாகி விடலாம் என்றெண்ணி முதலாளிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி தனது நாஷிக் கட்சிக்குச் சொல்லி பார்லிமெண்டிற்கு தீயை வைத்துவிட்டு சோஷியலிஸ்டுகள் (பொதுவுடமைக்காரர்கள்) தான் பார்லிமெண்டிற்கு தீ வைத்தார்கள் ஆகையால் சோஷியலிஸ்டுகளை இந்தச் சமயமே அடக்கவேண்டும் அதற்காகவேண்டி எனக்கதிகாரம் தரவேண்டும்" என்று ஜர்மன் குடி அரசுத் தலைவனிடம் தெரிவித்தான். இதற்கு ஹிட்லரை தூண்டி விட்ட முதலாளிகளும், தன் செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வேண்டி சோஷியலிஸ்ட்டுகள் தான் பார்லிமெண்டிற்குத் தீ வைத்தார்கள். ஆகையால் சோஷியலிஸ்டுகளை அடக்குவதற்கு தாமதமின்றி ஹிட்லருக்கு அதிகாரம் கொடுத்தே ஆகவேண்டும் என்று குடி அரசுத் தலைவரை வற்புறுத்தினார்கள். உடனே ஹிட்லருக்கு அதிகாரம் கிடைத்தது. ஹிட்லர் உடனே "சூராவளிப்படை" என்ற பெயர் கொண்ட கொடிய படையொன்றைத் திரட்டி அதன் மூலமாய் ஜர்மனியிலுள்ள சோஷியலிஸ்ட் சங்கங்கள் எல்லாவற்றையும் சின்னாபின்னப்படுத்தி சோஷியலிஸ்ட்களை சிறைப்படுத்தினான். இதுதான் சோஷியலிசக்காரர் சொல்லும் உண்மை.

### யூதர்கள் படும்பாடு.

சோஷியலிசத்தை உலகிற்கு போதித்த மார்க்ஸ் யூதரான காரணத்தினால் ஜர்மனியிலுள்ள யூதர்களை யெல்லாம் ஈன மிறக்கமின்றி ஜர்மனியை விட்டும் ஓடிப்போகும்படி சூராவளிப் படையைக் கொண்டு அடித்துத் துரத்தினான் அவர்களுடைய சொத்துக்களையும், உத்தியோகங்களையும் தனது நாஷிக் கட்சியில் சேர்ந்தவர்களுக்கும், இனபந்துக்களுக்கும் கொடுத்தான். ஜர்மனியை விட்டுத் துரத்தப்பட்ட யூதர்கள் குடியேற இடமில்லாமல் குழந்தை குட்டிகளுடன் தவித்தார்கள். குடியேற முயன்ற இடங்களில் எல்லாம் மனிதாபிமானமில்லாத தேசாபிமானிகள் இடமளிக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். கடைசியில் ஆதரிப்பார் அற்ற இந்த யூத மக்கள் பாலஸ்தீனத்திற்குக்குடியேறினார்கள். அங்கும் அவர்களுக்கு தேசாபிமானமும், மத வைராக்கியமும் கொண்ட முஸ்லீம்கள் "நீங்கள் யார்! எங்கள் ஜாதியா!! தேசமா!!! மதமா!!!! என்று சொல்லி தேசத்தை விட்டு வெளியேறும்படி சொன்னார்கள். வேறு இடமற்ற அவர்கள் பலாத்காரமாக இருக்க முயன்றார்கள், இது முஸ்லீம்களுக்கு ஆத்திரத்தை யுண்டுபண்ணி விட்டது. இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் கூடசிலர் மனிதாபிமானத்தைத்துறந்து மகாநாடுகள் கூட்டி முஸ்லீம்களின் தேசமாகிய பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடி ஏறுவதை நாங்கள் மனப்பூர்வமாக எதிர்க்கிறோம்" என்று கண்டனத்தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். முஸ்லீம் பத்திரிகைகள் எல்லாம் பக்கம் பக்கமாக எழுதின இத்தனை கொடுமையும்,கொடுங்கோன்மையாளனாகிய ஹிட்லர் ஜர்மனியிலுள்ள சோஷியலீஸ்ட் இயக்கத்தை நசுக்கக் கையாண்ட அடக்குமுறையிலிருந்து உதித்தன! மேற்காட்டியபடிதான் ஹிட்லரும், முதலாளிகளும் ஜர்மனியில் வெற்றியடையக் கூடிய நிலைமையிலிருந்த சோஷியலிசத்தை நசுக்கிசின்னாபின்னப்படுத்தினார்கள். இத்தாலியிலும், முதலாளிகளின் உதவியைப்பெற்ற முஸோலினி இத்தாலியிலுள்ளபதினாயிரக்கணக்கான சோஷியலிஸ்ட்களை சிறைப்படுத்தி சோஷியலீஸ்ட் சங்கங்களை அழித்தான். சோஷியலீச்த்தைப் பற்றி எந்தப்பத்திரிகையும் எழுதக்கூடாது என்று தடுத்தான். முஸோலினியின் சர்வாதிகாரத்தின் கொடுங்கோன்மையால் இத்தாலியில் சோஷியலிசம் பரவாதபடி தடுக்கப்பட்டு வருகின்றன.

முஸோலினியின் பாஸிஸ்ட்கொள்கையையே கொண்ட சர்வாதிகாரி டால்பஸ், முஸோலினியைவிட கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டு சோஷியலிஸ்ட்டுகளை சிறைப்படுத்தி சோஷியலிசம் பரவாதபடி தடுத்து வந்தான். சமீபத்தில்தான் இவனுடைய கொடிய அடக்குமுறைகளைக் கண்டு ஆத்திரமேலிட்டவர்கள் (டால்பஸை)சுட்டுக்கொன்றார்களாம்.

ஜர்லாந்தில் டிவாலரா ஜர்லாந்தில் சோஷியலிசம் பரவாதபடி தடுத்து வருகிறானும். இவ்வளவு காலமாக முதலாளித்துவ தேசங்கள் சர்வ

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

## கோலாரில் தோழர் ஈ. வெ. ரா.

கோலார் கோல்ட் பீல்ட் ராபர்ட்ஸன் பேட்டையில் தோழர்கள் M. ஜெயராம் அவர்களுக்கும், K. இந்திராணி அம்மாள் அவர்களுக்கும் 14-10-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ("ராகுகாலத்தில்") 5 மணிக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் திருமணம் ஏற்பாடு செய்திருந்தபடி தோழர் ஈ. வெ. ரா. கோயமுத்தூரில் இருந்து நேரே பவுரிங்பேட்டைக்கு வந்து சேர்ந்ததும் அங்கு ஸ்டேஷனில் தோழர் ஜெயராம் உள்பட பலர் மேடைக்கு வந்து ஜே கோஷத்துடன் மாலையிட்டு வரவேற்று ஜாகைக்கு அழைத்துச் சென்று அங்கு ஸ்கவுட்ஸ் பிரமுகர்களால் ஒரு விருந்து செய்யப்பட்டு மாலை 4 மணிக்கு காரில் கோலார் ராபர்ட்சன் பேட்டைக்கு அழைத்துச் சென்றார்கள்.

இதற்குள் கோலாரில் தோழர் ஈ. வெ. ரா. வந்ததும் அரசாங்கத்தார் தடை உத்திரவு போட்டிருந்ததாகவும், மீறினால் உடனே அரஸ்ட்டு செய்ய ஏற்பாடு செய்திருந்ததாகவும் வதந்தி ஏற்பட்டு ஊர் முழுவதும் பெரிய குழப்பமாக இருந்து வந்தது. தோழர் ராமசாமி கோலார் சென்று அங்கு தோழர் ராஜகோபால்சாமி நாயுடு அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தீண்டாமை விலக்கு வேலை செய்துவரும் தோழர் கோபால்சாமி அய்யர் அவர்கள் அதிகாரிகளைச்சந்தித்து அப்படிப்பட்ட உத்திரவு போடுவது ஊருக்குள் கலவரத்தை உண்டாக்கி விடுமென்று சொல்லி தடுத்துவிட்டதாகவும் கல்யாண அழைப்புக்கே வருகிறார் என்று சொன்னதின் பேரில் அப்படிப்பட்ட உத்திரவு ஒன்றும் போடப்படவில்லை என்றும் சொன்னதின் பேரில் லக்ஷ்மிபதி கொட்டகையில் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து சுமார் 5½ மணிக்குள் 1000க்கு மேல்பட்ட ஆண்களும், 100 பெண்களும், அதிகாரிகள், சட்டசபை மெம்பர்கள், உபாத்தியாயர்கள், பிரமுகர்களாகக்கூடி இருந்தார்கள்.

கூட்டத்துக்கு ஈ. வெ. ரா. தலைமை வகிக்கும்படி முறையே பிரேரேபித்து ஆமோதித்த வுடன் தோழர் ஈ. வெ. ரா. தலைமைவகித்து மணமக்களை அறிமுகப்படுத்தி திருமணம் செய்துகொள்ள அனுமதித்தார். மண ஒப்பந்தம் சொல்லிமோதிரம் மாற்றிக்கொண்டது தவிர வேறு எவ்வித சடங்குமில்லாமல் 45செகண்டில் அதாவது முக்கால் நிமிஷத்தில் திருமணம் நடந்தது.

பிறகு தலைவர் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் திருமணம், சீர்திருத்தம், சமதர்மம் என்பது பற்றி 1½ மணி நேரம் பேசினார். பிறகு தோழர் கோபால்சாமி அய்யர் சீர்திருத்தத்தைப் பற்றி 10 நிமிஷம் பேசினார். பிறகு தோழர் அப்பாதுரையார் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் 7½ மணி சுமாருக்கு இனிது முடிந்தது.

உடனே அந்த மண்டபத்தில் சுமார் 200 பேர்களுக்கு மேலாகவே சமதர்ம விருந்து நடந்தது. இது முடிந்ததும் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் 100 பேர்களுக்கு மேலாகவே பின் தொடர உரிகம் ஸ்டேஷனுக்கு வந்து அங்கிருந்து ஈரோட்டுக்கு டிக்கட் வாங்கி ஈரோட்டுக்குப்புறப்பட்டார். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் தோழர்கள் அப்பாதுரையார், ராஜரத்தினம், லாசரஸ், கோபால்சாமி அய்யர், ராஜகோபால் நாயுடு, பொன்னரங்கம், புரபசர் முனிசாமி, முத்துசாமி, N. N. முனிசாமி, செல்வமணி, மதுரமுத்து, பார்த்தசாரதி, முருகேசம்பிள்ளை M. L. C. தாங்தோணி M. L. C. மதுரமுத்து முதலியவர்களாவார்களாகும்.

# ஐரோப்பாவில்
## 15 வருஷங்களுக்குள்
# முடியாட்சி ஒழிந்து
## சர்வாதிகாரிகள் ஆட்சி நிலவிய தேசங்கள்

மகாயுத்தம் வந்து உலகில் எத்தனை விதமான மாறுதல்களையோ உண்டுபண்ணி விட்டது. ஐரோப்பாவை அஃது ஒரு ஆட்டு ஆட்டி விட்டது. சிலமுடியரசுகளைத் தவிடுபொடி யாக்கிவிட்டது. எதேச்சாதிகாரம் செய்துகொண்டிருந்தநாடுகளில் சர்வாதிகாரிகளைப்புகுத்திவிட்டது. நாட்டின் முன்னேற்றமும், அபிவிருத்தியும், சர்வாதிகாரிகளின் திறமையையும், தைரியத்தையும் பொறுத்ததாக ஆகிவிட்டது.

### சர்வாதிகார மோகம்

இந்த சர்வாதிகார மோகம் வர வர மேனாட்டில் அதிகரித்து வருகிறது. இந்தப் பயங்கரத் தொத்துநோய் சிறுகச் சிறுக ஐரோப்பா முழுவதுமே பரவி விட்டது. சமீபத்தில் சர்வாதிகாரத்துக்குள்ளான பல்கேரியாவுடன் இன்றையஐரோப்பாவில் 10சர்வாதிகாரநாடுகளிருக்கின்றன. அவைகளின் விவரங்களையும், எந்தெந்த வருடங்களில் அவைகளில் சர்வாதிகாரத்துவம் புகுந்ததென்பதையும் கீழே விரிவாகத் தரப்படுகிறது.

### இத்தாலி

மகா யுத்தம் வந்துவிட்டுப்போனதுதான் தாமதம். இத்தாலியில் அமளியும், குமிழியும் கிளம்பத் தொடங்கியது. பாஸிஸ்டு இயக்கம் உச்சஸ்தானத்தை அடைந்தது. எனவே 1922-ம் வருடம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி யன்று இத்தாலியில் சர்வாதிகாரத்துக்குப்பட்டம் சூட்டப்பட்டது. பாஸிஸ்டுக் கக்ஷித் தலைவர் இத்தாலி சர்க்காரின் சர்வாதிகாரியாக இத்தாலிய மன்னரால் ஒப்புக்கொள்ளப்பட்டார்.

### துருக்கி

இத்தேசம் ஐரோப்பாவின் நோயாளி என்ற பெரிய பட்டத்தைப் பெற்ற தேசமாகும். துருக்கி என்றாலே இரண்டுமடக்கு ஜலம் குடித்துக்கொண்டு மக்கள் ஏளனம் செய்து பேசி வந்த காலமும் உண்டு. மகாயுத்தம் வந்தது. துருக்கியும் தனது நிலையை பரீக்ஷார்த்த முறையில் உணரத்தொடங்கியது. துருக்கியின் க்ஷேமத்திற்காக முஸ்தபா கமால் முனைந்தார். 1922ம் வருடம் நவம்பர் மாதத்தில் துருக்கி, சுல்தான் ஆட்சிக்கு முடிவுகாலம் ஏற்பட்டது. முஸ்தபாகமால் முடியாட்சியை ஒழித்து குடி யாட்சியை ஸ்தாபித்தார். புதிய ஆட்சி முறைப்படி முஸ்தபா துருக்கி சர்வாதிகாரியாக இருந்து தொண்டாற்றி வருகிறார்.

### போலந்து

சர்வாதிகாரப் பித்தம் மேற்கூறிய இரு நாடுகளோடு நின்றுவிடவில்லை. இத்தாலியும், துருக்கியும் சர்வாதிகாரிகள் கைக்குள் வந்ததைப் பொறுமையுடன் போலந்து நோக்கிக்கொண்டிருந்தது. அவைகளைப்போலதானும் சர்வாதிகாரத்திற்குள் ஆகிவிடவேண்டுமென்றுசமயத்தை எதிர் பார்த்துக்கொண்டு ஏங்கிக்கொண்டிருந்தது. 1926-ம் வருடம் மே மாதத்தில் மார்ஷல்பில் சுட்ஸ்கியை போலந்து சர்வாதிகாரியாக ஆக்கிக்கொண்டது.

### ரஷியா

ரஷியாவில் அட்டூழியம் தலைக்கேறிப் போகவே லெனின் என்றொரு மகான் அவதரித்தார். கொடுங்கோலாட்சிக்குக்குழிதோண்டினார். பின் ஜோசப் ஸ்டாலின் 1926-ம் வருடம் பொதுவுடமைக் கட்சியின் பிரதம காரியதரிசி என்ற ஹோதாவில் ரஷ்யாவுக்குக் சர்வாதிகாரியாக வந்தார். ஸ்டாலின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் ரஷியா படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருகிறது.

### போர்ச்சுகல்

1926-ம் வருடம் முதற்கொண்டு போர்ச்சுகல் தேசத்தில் அண்டோனியோ கார்மோனா என்பவரே தேசத் தலைவரும், சர்வாதிகாரியுமாய் இருந்து வருகிறார். பெரிய பெரிய வல்லரசுகளை எல்லாம் பிடித்த இந்தத்தொத்துநோய்க்கு சின்னஞ் சிறு போர்ச்சுகல் தப்பித்துக்கொள்ள முடியுமா!

### யூகோஸ்லோ வோக்கியா

இங்கு 1926-ம் வருடம் ஜனவரி மாதம் சர்வாதிகாரத்துவம் அரங்கேற்றப்பட்டது. இத்தேச மன்னராகிய அலக்ஸாண்டரே, சர்வாதிகாரத்துவம் என்னும் தொத்துநோய் தேசத்தைப் பிடித்துக்கொண்ட பின் அதற்கடிமைப்படுவதை விட முன்னரே அதற்கடிமைப்படுவது நலமென தீர்மானித்து விட்டார், எனவே மன்னரே பார்லிமெண்டுக் கொள்கையை வேரறுத்துவிட்டு சர்வாதிகாரத்துவத்தை நிலை நிறுத்தினார்.

### ஜெர்மனி.

மகாயுத்தம் முடிந்ததுமே ஜெர்மனியின் முடியரசு குடியரசாக்கப்பட்டது. ஆனால் 1933-ல் ரெயிச்சபையில் அத்யக்ஷராக வந்த ஹெர் ஹிட்லர்தான் சர்வதிகாரத்துவத்தை ஜெர்மனியில் அசைக்க முடியாதபடி நிலைநாட்டியவராகும்.

### ஆஸ்திரியா.

1933-ம் வருடம் செப்டம்பர் மீ டாக்டர் டால்பஸ் என்பவரைச் சர்வாதிகாரியாகக் கொண்ட ஒரு திட்டம் ஆட்சிக்கு வந்தது. டாக்டர் டால்பஸ் சர்வாதிகாரியாக வருவதற்கு முன் அங்கு ஜனநாயக ஆட்சி முறை இருந்து வந்தது. இடையில் இப்புதிய திட்டமும் கைவிடப்பட்டது. இருந்தாலும் அதிகாரம் யாவும் சர்வாதிகாரி கையிலேயே இருந்து வருகிறது. (சமீபத்தில் டாக்டர் டால்பஸ் சுட்டுக் கொல்லப்பட்டதும் புதிய சர்வாதிகாரி நியமிக்கப்பட்டதும் நேயர்களறிந்ததே.)

### லட்வியா.

1934-ம் வருடம் மே மாதம் 7-ம் தேதியன்றுதான் லத்வியாவுக்கு சர்வாதிகாரப் பித்தம் காலெடுத்து வைத்தது. பார்லிமெண்டரி திட்டப்படி நடந்து வந்த லட்வியா கவர்ன்மெண்டு மேற்படி மாதத்தில் சர்வாதிகாரத்துவமாக மாற்றப்பட்டது.

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# சத்தியமூர்த்தியின் எலக்ஷன் தந்திரங்கள் வெட்ட வெளிச்சம்.

## சத்தியமூர்த்தியின் வண்டவாளம்.

### சென்னை சுயராஜ்யக்கட்சிக்காரர்களுக்கு காங்கிரஸ் தலைவர்கள் அளித்த நற்சாக்ஷிப்பத்திரங்கள்.

### சத்தியமூர்த்தி சிறைசென்ற வரலாறு.

### தோழர் *A. R.* முதலியாரின் பிரசங்கக்குறிப்புகள்

தோழர் ஏ. ராமசாமி முதலியார் 8-10-34ல் சென்னை எம்பிரஸ் தியேட்டரில் காங்கிரஸ் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களுடைய— குறிப்பாக தோழர் சத்தியமூர்த்தியினுடைய யோக்யதையும், எலக்ஷன் தந்திரங்களும்என்னும் பொருள்பற்றி அருமையானபிரசங்கம் செய்தார். அதில் முக்கியமானவற்றை ஈண்டு பிரசுரிக்கிறோம்.

"தலைவரவர்களே! சீமாட்டிகளே!! சீமான்களே!!!

திருவல்லிக்கேணி வாசிகளாகிய உங்களிடம் பேச எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தையளித்ததற்காக வந்தனமளிக்கிறேன். மேலும், இரண்டு தினங்களுக்கு முன் கோக்கலே ஹாலில் தோழர் சத்தியமூர்த்தி செய்த பிரசங்கமென்கிற பொய் மூட்டையை உங்களுக்கு அவிழ்த்துக் காட்டவும், பொருப்பற்ற ஆணவப் பேச்சுகளுக்கு ஆப்புக்கொடுக்கவும் நான் இன்றிரவு உங்கள் முன் வந்திருக்கிறேன். என்னுடைய எதிரி வசிக்கும் இதே டிவிஷனில் நீங்களும் வசிக்கிறதனாலும், உங்களுக்கும் அவரைப்பற்றியும், அவருடைய யோக்யதைகளைப் பற்றியும் தெரியுமாதலாலும், நான் அவர் பிரசங்கத்திற்கு ஆப்புக்கொடுக்க இது தான் தகுந்த இடமென்று தீர்மானிக்கிறேன். (சபாஷ்! சபாஷ்!!)

என்னுடைய தேர்தல் பிரசாரங்களில் நான் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்குவது கிடையாதென்று உங்களுக்குத் தெரியும். நான், என்னைப்பற்றியும், என்னுடைய கட்சியின் கொள்கைகளைப்பற்றியுமே மகாஜனங்களுக்கு எடுத்துக் கூறி வந்திருக்கிறேன். அச்சமயங்களில் காங்கிரஸ்காரர்களின் கொள்கைகளுக்கும், எங்கள் கட்சியின் கொள்கைகளுக்குமுள்ள பேதாபேதங்களையும், முரண்பாடுகளையுமே எடுத்துக்கூறி வருகிறேன். கொள்கைகளையன்றி தனிப்பட்ட மனிதனை நான் தாக்குவதே கிடையாது.

ஆனால், எனக்கு விரோதமாகச் செய்யும் எதிர்ப்பிரசாரம், நாடோறும் காலித்தனத்தில் முற்றிக்கொண்டும், வலுச்சண்டைக்கழைப்பதாகவும் இருப்பதைக்காண்கிறேன். என் எதிரிகள் விஷமத்தையும், கலப்பற்ற அபாண்டங்களையும் தாராளமாகக் கையாளத்தொடங்கி விட்டனர். துவேஷமும், நன்றி கெட்ட வார்த்தைகளையுமே திருப்பித்திருப்பி பேசி வருகிறார்கள். இந்த நகரத்தின் காங்கிரஸ் கட்சி குறிப்பாக அந்தப்பெரிய காங்கிரஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி ஏமாற்றப்பார்ப்பவர்கள் இன்று தங்களுடைய அபேட்சகருக்கு செல்வாக்கும், ஆதரவும் சம்பாதித்துக் கொடுப்பதற்காக கலப்பற்றபொய்களைப் பிரசுரிக்க வேண்டிய அவசியத்திற்கு வந்து விட்டார்கள். (வெட்கம், வெட்கம்) இந்த மாதிரியான கேவல முறையால்தான் தாங்கள் ஓட்டுப் பெற முடியும் என்கிற அவர்களுடைய எண்ணம் வெளியாகவில்லையா? வரவர சத்தியமூர்த்தி தனிப்பட்ட முறையில் தாக்க ஆரம்பித்து விட்டார். அன்று அவர் கோக்கலே ஹாலில் செய்த அந்த அற்புதமான பிரசங்கத்திலிருந்து மருந்துக்காவது ஒரு உண்மையைத்தேடி எடுக்க முடியாதென்றால் அவர் பிரசாரத்தின் யோக்கியதை எப்படிப்பட்டதென நீங்களே அறிந்து கொள்ளலாம்.

தோழர் சத்தியமூர்த்தி சொல்லுகிறார்: "காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளுக்குச்சென்றபோது ஹானரபிள் தாம்பே என்கிறவர் (முதலில் எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில் மெம்பராகவும், பிறகு மத்திய மாகாண கவர்னராகவும் வந்தவர்) ஒருவர்தவிர, மற்றவர்கள் ஒருவரும், உயர்ந்த உத்தியோகத்திற்கோ, அதிகாரத்திற்கோ இச்சிக்கவே இல்லை. சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் அதிகாரத்தை ஏற்கவும் உள்படவில்லை." இதற்கு நான் கொடுக்கும் பதில் என்னவென்றால்:-சத்தியமூர்த்திசொன்னமேற்படிகூற்றை சென்னைப்பொதுமக்களாகிய நீங்கள் ஒப்புப்புக்கொள்ளுவதாய் இருந்தால் உங்களுக்கு ஞாபக சக்தி குறைவு என்றுதான் சொல்லுவேன். முன்பு சென்னை சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் சட்டசபைக்குச் சென்றதும், அங்கு அவர்களை மந்திரிப்பதவிகளை ஏற்றுக் கொள்ள அழைத்தபோது மறுத்ததும்உங்களுக்கு நினைவிருக்கும். ஏன் மறுத்தார்கள் தெரியுமா? அவ்விதம் மறுத்ததற்கு முக்கியமான முதல் காரணம் தங்களுக்கு பலமில்லை என்பது, இரண்டாவது காரணம் அதிகாரத்தை ஏற்கப்பிரியப்பட்ட ஒரு சிலருக்கு எலக்ஷன் வாக்குறுதிகளை எப்படியாவது வித்தைகாட்டி புறக்கணித்து விடலாமென்கிற தைரியமிருந்தபோதிலும் தோழர் சத்தியமூர்த்தியைப்போன்ற மனிதர்களை வைத்துக்கொண்டு எப்படி நாணயமாய் நடந்துகொள்ள முடியும் என்கிற எண்ணம் அதைரியத்தை ஊட்டிற்று. 1926ல் அவ்வளவு பெரிய எண்ணிக்கையோடு சட்டசபை சென்று அவர்கள் பின் என்னதான் செய்தார்கள்? தங்களுக்கிருந்த நல்ல சந்தர்ப்பத்தையும், செல்வாக்கையும் உபயோகித்து ஒரு பொய் மந்திரி சபையை ஸ்தாபித்து விட்டு அந்த மந்திரிகளின் நிழலில் இருந்துகொண்டு அதாவது அவர்களை தங்கள் வசப்படுத்திக்கொண்டு தங்களிஷ்டப்படி எல்லாம் அதிகாரம் செலுத்தினார்கள். தங்களுக்கு வேண்டிய எல்லா ஆதரவையும்,உத்யோகங்களையும் பெறவில்லையா? அந்தக்காலத்தில் ஜில்லாபோர்டுகளிலும், முனிசிபாலிட்டிகளிலும் நாமினேஷன் சம்பந்தமாக நடந்த சங்கதிகள் நீங்கள் அறியாததா? சர்க்கார் நாமினேஷன் செய்யுமிடங்களுக்குப்போவது கௌரவக் குறைவெனச்சிலம் பேசிய இவர்கள், அந்தக்காலத்தில் எல்லா நாமினேஷன் சீட்டுகளும் காங்கிரஸ்காரர்களுக்கே கிடைக்கும்படி செய்து அதன்படியே எல்லா இடங்களுக்கும் காங்கிரஸ்காரர்களே நியமிக்கப்பட்ட விஷயமும் உங்களுக்குத் தெரியாததல்ல. காங்கிரஸ் காரர்களுக்கிருந்த உத்தியோகப்பேராசைகள் தீர்த்துக் கொள்ள அக்காலத்தில் எவ்வளவு அநியாயங்கள், அக்கிரமங்கள் நடந்தனவென்பதும் உங்களுக்குத் தெரிந்ததே. அதுமட்டுமா? கௌன்சிலில் தாங்கள் சர்க்காருக்கு எதிர்க்கட்சி என வெளிக்குக் கூறிக்கொண்டு, உள்ளுளவாக மந்திரிகளுக்கு உதவியாகவும், அனுகூலமாகவும், மந்திரிகளின் சூத்திரதாரிகளாயுமிருந்தது நீங்கள் அறியாததா? (வெட்கம்! வெட்கம்!!)

அந்த சுயராஜ்பக் கட்சியைப்பற்றி பெரிய தேசியத்தலைவர்கள் என்பவர்களின் அபிப்பிராயத்தை இங்கு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். கேரள மாகாண காங்கிரஸ் மகாநாட்டில் தோழர் பி. ஜி. ஹார்னிமேன் அந்தக்காலத்தில் சொன்னதாவது:- "சென்னை சட்டசபைக்கு ஏதேதோ சாதித்து விடப்போவதாகக் கூறிக்கொண்டு போய்இப்போது காங்கிரஸ் பெயருக்கு இழிவுஉண்டாக்கும் மாதிரியிலும், காங்கிரஸையேகாட்டிக்கொடுக்கும் விதமாகவும் இவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். குஜாராத்தி காங்கிரஸ் எதைச்செய்யக் கூடாதென வற்புறுத்தியிருக்கிறதோ அதைக்காற்றில் பறக்க விட்டுவிட்டு மந்திரிசபைக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உதவிசெய்து வருகின்றனர். இவர்கள் அவ்விதம் செய்யாவிட்டால் எந்தவிதமான அபாயம் வருவதாய் இருந்தபோதிலும் (ஜஸ்டிஸ் கட்சி எங்கு அதிகாரத்திற்கு வந்து விடுமோ என்பதுதான் அந்த அபாயம்) தங்கள் கொள்கைகள் அங்கு அங்கீகரிக்கப்படவில்லை எனத் தெரிந்தால் தங்கள் ஸ்தானங்களை ராஜீனமா செய்துவிட்டு பேசாமல் வந்து விட வேண்டியதே தவிர மற்ற எந்த விதமாகவும் நடந்து கொள்ளக்கூடாது."

பழுத்தகாங்கிரஸ்காரராகவும், சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின்உபதலைவராகவுமிருந்த தோழர் சத்தியமூர்த்தியும்,அவருடைய சகாக்களும், தங்கள் கட்சிக்காரர்களுக்கு லோக்கல்போர்டுகளிலும், முனிசிபாலிட்டிகளிலும் நாமினேஷன் வாங்கிக்கொடுப்பதற்காக அந்த மந்திரிகளின் வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்த சங்கதி யாருக்குத்தான் தெரியாது?

எதிர்க்கட்சி அங்கத்தினராயிருந்த தோழர் எஸ். முத்தையாமுதலியார் அந்தக்காலத்தில் காங்கிரஸ்காரர்களை ஆட்டிவைத்தவர். அவர் 20-5-1927ல் சுயராஜ்யக்கட்சியின் நடவடிக்கைகளைப்பற்றி கூறியுள்ளதாவது:-"சென்னை காங்கிரஸ் கட்சி இரட்டையாட்சிக்குள் இரட்டையாட்சியை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. மந்திரிகள் அதிகார ஸ்தானங்களில் உட்கார்ந்திருக்கிற போதிலும்உண்மையில் அவர்கள் கையில் அதிகாரமோ, சுயேச்சையோ ஒன்றையும் காணவில்லை. ஆனால் அதே சமயத்தில் காங்கிரஸ் எதிர்க்கட்சியில், உட்கார்ந்திருப்பதாய் காட்டிக் கொண்டிருக்கிறபோதிலும் உண்மையில் அதுவே அதிகாரம் செலுத்திவருகிறது. இது எப்படி இருக்கிறதென்றால் ஒருவன் தன்னை சன்னியாசி என்று சொல்லிக்கொண்டு; தான் பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிப்பதாய் மணம் செய்து கொள்ள முடியாதென்றும் சொல்லிக்கொண்டு அதே சமயத்தில் விபசாரிகள் வீடு நுழைவதைப் போல்தானிருக்கிறது" (வெட்கம்! வெட்கம்!!)

சத்தியமூர்த்தியைத்தலைமையாகக் கொண்ட சுயராஜ்யக்கட்சி 1926ல் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு சட்டசபைக்குச்சென்று அங்கு கேவலமான முறையில் நடந்துகொண்டதைப் பற்றி மேலும் ருஜுப்பிக்க வேண்டுமானால், ஆந்திர நாட்டு

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு.

ஈரோடு 1934- அக்டோபர் 21-உ

## தேர்தல் ஜனப்பிரதிநிதித்துவத்திற்கா? பித்தலாட்ட வியாபாரத்திற்கா?

நாட்டில் எங்கு பார்த்தாலும் இப்போது இந்திய சட்டசபை ஸ்தானங்களுக்குத்தேர்தல் பிரசாரம் தொடங்கிவிட்டது. சட்டசபைகள் மாய்கையென்றும், அங்கு சென்று மக்களுக்குளெவ்வித நன்மையும் செய்ய முடியாதென்றும் சட்டசபைகள் அர்சாங்கம் தங்களுடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அரண்களென்றும், சட்டசபையில் சர்க்காருடைய வலுவு பிரதிநிதிகள் வலுவைவிட எவ்வளவோ மடங்கு மேல்பட்டதென்றும், அரசாங்கத்தின் வலுவைச் சட்டசபைமூலம் சிறிதாவது அசைக்கக்கூட முடியாதென்றும் தோழர்கள் காந்தியார், தாஸ், நேரு, ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் மாத்திரமல்லாமல் இன்று சட்ட சபைக்குக்காங்கிரஸ்மாறலாய் நிற்கும் அபேட்சகர்களுள்பட எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அபிப்பிராயமானது சட்டசபைக்கு வெளியிலிருந்து கொண்டு சொன்னதென்று எண்ணிவிட முடியாதபடி காங்கிரஸ் தலைவர்கள், தியாகிகள், மேதாவிகள் பலர் சட்டசபைக்குள் தக்க பலத்துடன் சென்று ஒருகைபார்த்து விட்டு வெளியில் வரும்போதும், வந்தபின்பும் சொன்னது என்பதை நாம் வாசகர்களுக்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை.

அன்றியும் சட்டசபைகளும், அதற்குள் சென்று நாம் செய்யக்கூடிய காரியங்களும் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டதென்பதும், அங்கு செல்பவர்கள் அதற்குள்ள அதிகாரவரம்புக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடந்து தீரவேண்டுமென்பதும், அப்படிக் கட்டுப்பட்டு அடங்கி நடப்பதின் மூலம் கூட அதனால் அடையக்கூடிய அளவு அதாவது அதிகாரமிருக்கும் அளவு முழுவதையும்கூட அடையமுடியாதென்பதும், அவற்றிற்குமேற்பட்டு ஒரு காரியம்கூடச்செய்யச் சட்டப்படி இடமில்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறதென்பதும் பகுத்தறிவுள்ள வாசகர்களுக்கு நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

இவையெல்லாம் பளிங்கு போல் ஏற்கனவே தெரிந்துதான் அதன் பலாபலன்களைப் பற்றி அனுபோகஸ்தர்கள் அப்போதே சொல்லி அதையணுகாமலிருந்தார்களென்று சொல்லலாம்.

இந்த நிலையில் அதாவது காங்கிரஸ்காரர்கள் பஹிஷ்கரித்த பிறகு, அதை விட்டு வந்த பிறகு, வெளியேறினபிறகு அந்தச் சட்டசபைகள் இப்போது ஏதாவது மாறுதலடைந்து விட்டதா? அல்லது ஏதாவது அங்கு போய்ச் சாதிப்பதற்குத் தகுந்தமாதிரி திருத்தியமைக்கப்பட்டு விட்டதா என்பவைகளைக்கவனித்தாலும் அந்தப்படி ஒன்றும் நடந்து விடவில்லையென்பதும் நன்றாய் விளங்கும்.

அப்படியிருக்க இப்பொழுது திடீரென்று சட்டசபைகளுக்கு அந்தப்படியெல்லாம் பேசிய காங்கிரஸ்காரர்கள் செல்லவேண்டுமென்று சொல்வதற்கும் அபேக்ஷகர்களாய் நிற்பதற்கும் என்ன காரணமென்பதைப் பொதுஜனங்களுக்கு விளக்கிக் காட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

ஆகவே நாளது வரையும் காங்கிரஸ்காரர்கள் இந்தப்பிரச்சினைக்கு எந்தக் காரணங்களையும் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் தோழர் காந்தியவர்கள் இம்மாதம் 15-ந்தேதி தான் காங்கிரசை விட்டு விலகிவிடத் தீர்மானித்திருப்பது சம்மந்தமாய் வெளியிட்டுள்ள அறிக்கையில் சட்டசபைக்குக் காங்கிரஸ்காரர்கள் போகவேண்டிய அவசியத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில்

''சட்டசபைப் பிரவேச விஷயமாக நான் இதற்கு முன் என்ன சொல்லியிருந்த போதிலும் சரி, காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போகவேண்டியது அவசியமென்று இப்போது கருதுகிறேன்'' என்று எழுதியிருக்கிறார்.

இதனால் நாம் தெரிந்துகொள்ளக் கூடியதென்னவென்று பார்ப்போமானால் ''அப்பொழுது எனக்கு இஷ்டமில்லை. இப்போது எனக்கு இஷ்டம்'' என்று சொல்லுகிறாரென்பதைத் தவிர வேறென்றும் காணப்படவில்லை. ஆகவே தோழர் காந்தியவர்கள் ஊரார் செலவில் ஊரார் கஷ்டத்தில் அரசியல் ABCD படித்து அனுபவம் பெற்று வருகிறாரென்றுதான் இதிலிருந்து கருதவேண்டியிருக்கிறது. இந்தப்படி காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போகவேண்டுமென்பதிலும் அங்கு போய்ச் செய்யக்கூடிய வேலைத்திட்டங்களை நிர்ணயிக்காமலும், சமூக சீர்திருத்தமான விஷயங்களில் பிரவேசிப்பதுமில்லை, அவைகளுக்கு இடம் கொடுப்பதுமில்லை என்று முடிவு செய்துகொண்டும், போகும்படிசெய்வதும் அந்தப்படி காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போன பின்பும் அவர்கள் சட்டசபையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கூடத் தான் இருந்து நடத்தாமலும், கவனிக்காமலும் இப்போதே காங்கிரஸிலிருந்து காந்தியார் விலகிக்கொள்ளப் போவதாய்ச் சொல்லுவதுமாகிய காரியங்களில் ஏதாவது புத்திசாலித்தனமோ, பொறுப்போஇருக்கின்றதா என்பதையும், இப்படிப் பட்ட கூட்டத்தாரைச் சட்டசபைக்குப் போக விடுவது பொறுப்பான காரியமோ புத்திசாலித்தனமோ ஆகுமா வென்பதையும் யோசித்துப் பார்க்கும்படி பொறுப்புள்ள ஓட்டர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இந்த லக்ஷணத்தில் மற்றொரு விஷயம் மிகவும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதாகுமென்பது நமது அபிப்பிராயம். அதாவது

''சட்டசபைத் தேர்தல்களில் அபேக்ஷகர்களாய் நிற்கும் ஆசாமிகளைப் பற்றி யாரும் கவனிக்காதீர்கள், அவர்கள் நிற்கும் கக்ஷிகளைப் பற்றிக் கவனியுங்கள்'' என்கின்ற பல்லவியின் மீது எலக்ஷன் பிரசாரம் நடத்துவதும், கக்ஷி சம்மந்தமான விஷயங்களில் விவகாரம் வரும்பொழுது ''கக்ஷிகளைக் கவனிக்காதீர்கள் மகாத்மாகாந்தியைக் கவனியுங்கள். கக்ஷியைப் பற்றியோ நபரைப்பற்றியோ கவனிக்காதீர்கள்'' என்பதும், காந்தியார் இன்ன இன்னபடி நடந்துகொண்டு இன்ன இன்னபடி சொன்னவராயிற்றே. ஆதலால் அவரைக்கவனித்து ஓட்டுக்கொடுக்க முடியுமா? என்ற, பிரச்சினை வரும்போது சட்டசபைக்கு நாங்கள் போனால் இன்ன இன்ன விஷயங்கள் செய்யமாட்டோமென்று தனிப்பட்ட முறையில் காந்தியார் கொள்கை என்பவைகளுக்கு விரோதமாக வாக்குக்கொடுப்பதுமாகிய காரியங்கள் இன்று காங்கிரஸ் எலக்ஷன் பிரசாரமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. இவை தக்க பொறுப்புள்ள ஆட்களாலேயே நடைபெற்று வருகின்றன.

ஆகவே இந்த நிலையில் காங்கிரஸுக்கு எந்த ஆதாரத்தின் மீது எந்தக் கொள்கைகளை வைத்து எந்த வேலைத்திட்டத்தை எதிர்பார்த்து யாரிடம் நம்பிக்கைகொண்டு ஓட்டர்கள் ஓட்டுச் செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

இவை ஒருபுறமிருக்க மற்றும் ஒரு சில பிரசாரக்காரர் ''காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் சட்டசபைக்குப் போய் வெள்ளையறிக்கையை நிராகரித்து விடுவோம். அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்து விடுவோம்'' என்று சொல்லுவதாகத் தெரிகிறது. இதையாவது உண்மையா? சரியா என்று யோசிப்போமேயானால் இதுவும் அர்த்தமற்ற பேச்சென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

வெள்ளையறிக்கைக்கு இன்னமும் முழு ரூபமும் ஏற்பட்டு விடவில்லை. அது அமுலுக்கு வர அதற்கு இன்னமும் எத்தனையோ சடங்குகள் நடைபெற வேண்டியிருக்கின்றன. அப்படியிருந்தாலும் அதை நிராகரிக்கத் தகுந்த மெஜாரிட்டியைச் சட்டசபையில் பெற்றுவிட முடியுமா? முஸ்லீம்களின் 30ஸ்தானங்களில் பத்திலொரு பாகமாவது காங்கிரஸ்காரர்களுக்கு அனுகூலமாகவிருக்கும்படி காங்கிரஸ் நடந்துகொண்டிருக்கின்றதா? வகுப்புத் தீர்ப்பைப் பற்றிச் சுவர்மேல் பூனையாய் இந்துக்களுக்குத் தலையையும், முஸ்லீம்

களுக்கு வாலையும்காட்டி வரும் வரையிலும், பண்டித மாளவியா போன்றவர்கள் அதைக் கூட எதிர்க்கக் கக்ஷி சேர்த்துக்கொண்டிருக்கும் வரையிலும் முஸ்லீம்கள் எல்லோரும் காங்கிரஸுக்குக் சரணாகதியடையக் கூடியவர்களென்று நாம் அவர்களை அவ்வளவு பைத்தியக்காரர்களாக எண்ணிவிட முடியுமா? ஒவ்வொரு முஸ்லீமும், "நான் முதலில் முஸ்லீம் அப்புறம் தான் இந்தியன்" என்று செய்த கர்ச்சனைகளை மறந்துவிட்டு அவர்கள் சமூகத்துக்கு துரோகமாகக் காங்கிரஸுக்கு வந்து அடிமையாவார்களென்று நினைப்பது முட்டாள்தனமாகாதா? என்றும் கேட்கின்றோம்.

இந்திய சட்டசபையில் நாமினேஷன்காரர்கள் 40 பேர், முஸ்லீம்கள் 30 பேர், வெள்ளைக்காரர்கள் 8 பேர், வியாபாரிகள் 4பேர், மிராஸ்தாரர்கள் 7 பேர், வகுப்புத் தீர்ப்பை யொழிக்காதவரையில் பிரிட்டிஷ் அரசாங்கமே மேலென்று சொல்லுகின்ற சீக்கியர்கள் 2 பேர், ஆக 91 ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் போய்விட்டால் மீதி 53 ஸ்தானங்களும் காங்கிரஸுக்கே கிடைக்குமா? இந்த 53ல் குறைவுபடும் ஸ்தானங்களாவது மேல்கண்ட ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் கிடைக்குமா? என்பனவாகியவைகளைக் கவனித்தால் இந்திய சட்டசபையில் மெஜாரிட்டி கிடைக்குமென்று எண்ண இடமிருக்கிறதா என்று ஓட்டர்கள் கவனிக்கமாட்டார்களா என்று கேட்கின்றோம்.

இரண்டாவதாக, அடக்குமுறைச்சட்டங்களை யொழித்துவிடுகின்றோமென்று சொல்வதும் அர்த்தமற்ற வார்த்தையென்று எப்படிச் சொல்லுகின்றோமென்றால் இன்று அடக்குமுறைச் சட்டங்களுக்கு நாட்டு மக்களிடத்தில் அதாவது காங்கிரஸ்காரர்களிடத்தில் வேலையேயில்லை. சிறப்பாக காங்கிரஸ்காரர்கள் பெரிதும் சத்தியாக்கிரகம் பயனளிக்கவில்லை, சட்ட மறுப்புத் தோற்றுவிட்டது என்கின்ற முடிவுக்கு வந்த பின்னும் காங்கிரஸும், காந்தியாரும் தேசம் இது சமயம் இந்த இரண்டுக்கும் தயாராயில்லை, ஆதலால் அவை ஒத்திவைக்கப்பட்டுவிட்டதென்று சொல்லிவிட்டதற்குப் பிறகும் இனி எதற்காகச் சர்க்கார் அடக்கு முறைகளைச் தேச மக்கள் மீது பிரயோகிக்கப் போகிறார்களென்று இந்தக் காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை. சத்தியாக்கிரகமும், சட்ட மறுப்பும் செத்தவுடன் (தற்காலிகமாகச்செத்திருந்தாலும் சரி) அடக்கு முறையும் செத்துவிட்டது என்பதில் சந்தேகம் ஏன்? அன்றியும் சர்க்கார், அதுவும் காங்கிரஸ்காரர் சட்டமறுப்பைச் — சத்தியாக்கிரகத்தை விட்டுவிட்டுச்சர்க்காருக்கு நல்ல பிள்ளையாக நடக்கஆசைப்பட்டு முன்பு உதரித்தள்ளிவிட்டசட்டசபைக்கு மீண்டும்போய் ராஜபக்தி—ராஜவிசுவாசம்—சட்டத்துக்குக்கட்டுப்பட்டு ஒழுங்காய் நடந்து கொள்ளுகின்ற ஒழுக்க விசுவாசம் ஆகிய சத்தியங்கள் செய்து கொடுத்துவிட்டு சர்க்கார் கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றி வணங்கி வரும் மக்கள் மீது அடக்குமுறைச் சட்டம் எதற்காகப் பிரயோகிக்கப் போகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை.

ஆகையால் அடக்குமுறைச் சட்டங்களை ஒழிக்கப்போகின்றோமென்பது செத்த பாம்பை அடிக்கப் போகின்றோமென்று சொல்வது போலாகுமேயொழிய வேறில்லை.

ஒரு சமயம் காங்கிரஸ்காரர்களல்லாத மற்றவர்கள் மீது அடக்குமுறைகளைஉபயோகிக்கிறார்களே, அதைக்காங்கிரஸ்காரர்நிறுத்தக் கூடுமென்று சிலர் நினைக்கக் கூடாதாவென்று கேட்கக்கூடும்.

அதுவும் அர்த்தமற்ற வார்த்தையேயாகும். ஏனெனில் காங்கிரஸ்காரர்கள் தவிர மற்றவர்களின் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளுக்கும், கொடிய சட்டப் பிரயோகங்களுக்கும், சட்டங்களின் துஷ்பிரயோகங்களுக்கும் காங்கிரஸ்காரர்கள் அனுகூலிகளாகவே இதுவரை இருந்து வருகிறார்கள். உதாரணமாகத் தோழர் காந்தியார் அவர்கள்தான் சொல்லும் காரியங்கள் தவிர வேறு எந்தக்காரியத்தை யார் செய்தாலும்,வேறு எந்தக் காரியத்துக்கு சத்தியாக்கிரகம் செய்தாலும், சட்டம்றுப்பு செய்தாலும் அவற்றையெல்லாம் பெரும்பாலும் ஒரே அடியாக பலாத்காரம் என்று சொல்லி வந்திருக்கிறார். இந்தமாதிரி பலாத்காரச் செய்கைகளின் மீது அடக்குமுறைகளை உபயோகிப்பதில் காந்தியாரின் ஆதரவையும், ஆமோதிப்பையும் வைத்துக்கொண்டே சர்க்காரார் உபயோகித்து வருகிறார்களென்பது தொக்கி இருக்கவில்லையா?

சமதர்ம இயக்கங்கள் சட்ட விரோதமான இயக்கங்களாகப் பாவிக்கப்படுமென்று ஒரு அடக்குமுறை உத்திரவைச் சமீபத்தில்தான் சர்க்கார் பிறப்பித்தார்கள். இதற்கு எந்த மகாத்மாவாவது, காங்கிரஸ் வாதியாவது தேசீய பத்திரிகையாவது மூச்சுகூடக் காட்டவில்லை.

சுயமரியாதை இயக்க ஸ்தாபனங்கள் சட்ட விரோதமான இயக்கமென்று சர்க்கார் தீர்மானிக்கப் போகின்றார்களென்பது வெளிப்படையான ரகசியம். அதன் பிரமுகர்களை ஒடுக்கவைக்கமுயற்சிகள்நடந்துகொண்டிருக்கின்றனவென்பதும் யாவரும் அறிந்த விஷயம். இவைகளைப்பற்றியெல்லாம் காங்கிரஸுக்கு எவ்வளவு ஆசை (அதாவது சீக்கிரம் சீக்கிரம் நடக்கவேண்டுமென்கின்ற ஆசை) இருக்கின்றதென்பது யாவரும் அறிந்ததேயாகும்.

காங்கிரஸுக்குள்ளிருக்கும் சமதர்மக் கொள்கையையே பலாத்காரம் கொண்டதென்று சொல்லிவிட்டபிறகு இனி அடக்குமுறையைக் காங்கிரஸ் எந்த முகத்தைக் கொண்டு ஆக்ஷேபிக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை

இவைஒருபுறமிருக்க இப்படிப்பட்ட யோக்கியதையில் சட்டசபைக்குப் போகப்பிரயத்தனப்படும் காங்கிரஸ்காரர்கள் எதிர் அபேக்ஷகர்கள் மீது கற்பனையானதும், பொய்யானதும், திருத்தலானதுமான பழிகளைச் சுமத்திப் பிரசாரம் செய்வது தங்களை சத்தியாக்கிரகிகளென்றும், சத்திய சீலர்களென்றும் சொல்லிக் கொள்ளும் யோக்கியர்களுக்குத்தகுதியானதாஎன்பதையும் இந்தத் தந்திரத்தின் பலனாகவே ஒரு சமயம் இவர்கள் ஜெயித்து விட்டாலும் இவர்கள் சரியான ஜனப்பிரதிநிதிகள் ஆகிவிடுவார்களாவென்றும்கேட்கின்றோம்.

வில்லிங்டன் துரைமகனார் "காங்கிரசில் யோக்கியர்களும், நாணயவாதிகளும், பொறுப்புள்ளவர்களும் மலிந்தில்லை காலிகளும், கூலிகளும், நாணயமும்,மானமரியாதையும் இல்லாத ஆட்களும் தான்மிகுந்திருக்கிறார்கள். ஆனதால் அந்த ஸ்தாபனங்களையோ, அந்த நபர்களையோ அவர்கள் வார்த்தைகளையோ மதிக்கக்கூடாது என்றும், இந்த ஆட்களை ஜனப்பிரதிநிதிகளென்றோ, நாணயமாய் நடந்து சட்டசபைக்கு வந்தவர்களென்றோ கருதக்கூடாது."

என்றும்சொன்னார் என்றால், சொல்லப் போகிறார் என்றால் சொல்லுவதானால் அதில் கடுகளவாவது தப்பு இருக்கக் கூடுமா என்று கேட்கின்றோம். இந்த யோக்கியதையில் இருக்கும் காங்கிரஸ்காரர் "வில்லிங்டன்பிரபு காங்கிரஸ்காரர்களை மதிக்கவில்லை. காங்கிரஸ்காரர்கள்ராஜிக்குஇரண்டுகையையும் நீட்டிக்கொண்டு போயும் கூட அவர்களை லட்சியம் செய்யவில்லை, ஆகவே வில்லிங்டன் பிரபுவின் அகம்பாவம் எவ்வளவு" என்றுசொல்லி தேசீயப்பத்திரிகைகளெல்லாம் இந்தப்படி கூப்பாடுபோட்டால் இதில் உண்மையோகியாயமோ ஏதாவது இருக்கின்றதா—இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

சென்னையில் ஒரு காங்கிரஸ்காரர் காந்தி பெயரைச்சொல்லிக்கொண்டு திரிபவர், மேலே துணிகூடப் போடாமல் காந்தி போலவே வேஷம் போட்டுக்கொண்டு நடப்பவர் பொது மக்கள் பணத்தைக் காங்கிரசின் பேரால் மாதம் நூற்றுக்கணக்காய்ப்பெற்று வாழ்பவர் தோழர் சத்தியமூர்த்திக்காகத்தேர்தல் பிரசாரம் செய்யும்போது "கோவில்களை இடிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஓட்டுப் போடுகிறீர்களா?" என்று கேட்டாராம். இதிலிருக்கும் அயோக்கியத்தனத்துக்கு அளவு எவ்வளவு என்று கேட்பதோடு இந்த ஆட்கள் யோக்கியதையே இப்படிஇருந்தால் மற்றபடி எவ்வளவு சிறியவுதவிக்கும் எந்தக்காரியத்தையும் செய்யத்தயாராயிருக்குஞ்சாதாரண ஆட்களிடம் எந்தக்காரியத்தைத்தான் எதிர்பார்க்கக் கூடாது என்றுகேட்கின்றோம்.

கோயில்களின் பேரால் பொறுக்கித்தின்று வயிறுவளர்க்கும் கூட்டங்கள் தங்களுடைய ஆதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள மூடஜனங்களை ஆயு

தமாகக் கொண்டிருப்பது மாத்திரமல்லாமல் எப்படிப்பட்ட முக்கியமான விஷயத்தில் இக்கேவலமான காரியங்களைச்செய்யத்துணிகின்றார்கள் என்பதைக்காண இந்த ஒரு உதாரணம் போதாதாவென்று கேட்கின்றோம்.

தோழர் ஏ ராமசாமி முதலியார் அவர்கள் பெரிய அழுக்கு மூட்டை (வைதீகர்) என்று சொல்லலாம். அவர் காலம் நேரம், சகுனம், சாமியுத்திரவு, சாஸ்திரம் ஆகியவை பார்க்காமல் ஒரு வேலையும் செய்வதில்லை. ஒரு நொடிக்கு 100தரம் கடவுளைக் கூப்பிடுகிறார். அப்படிப்பட்டவர்விஷயத்தில் "கோயிலை இடிக்கும் நபர்களுக்கு ஓட்டுப்போடுகின்றீர்களா" என்று கேட்ட ஆசாமிகள் வேறு எந்த விதமான கொலை பாதகச்செயலைச் செய்ய அஞ்சுவார்கள் என்பது நமக்குவிளங்கவில்லை. கோவிலை இடித்தால் இவர்கள் அப்பன் தேடிக்கட்டி வைத்த முதல் என்ன போய் விடுமென்பதும் நமக்கு விளங்க வில்லை. கோவில்களை இடித்தரஷியாதேசம் —இந்த மாதிரி கோயிலின் பேரால் வயிறு வளர்த்த கூட்டங்களின் கையில் மண் வெட்டியையும், கோடாலியையும் கொடுத்த ரஷியாதேசம் இன்று "குபேர" செல்வம் படைத்த நாடாக விளங்குகின்றதே யொழிய பூகம்பத்தால் அழிந்து போய் பூகம்ப கஷ்ட நிவாரண வேலை செய்ய இந்தச் சோம்பேரிக்கூட்டங்களைக் கூப்பிட்டு அதன் பேரால் வயிறுவளர்க்க விடவில்லையென்று இடித்துக்காட்டுகிறோம்.

மற்றபடி இப்படிப்பட்ட கூட்டத்தின்பேரால்அதாவது காங்கிரசின் பேரால் தேர்தலுக்கு நிற்கும் ஆட்களின் யோக்கியதையை யாராவது அறியவேண்டுமானால் அதற்கு ஒரேஒரு உதாரணம் காட்டுவோம்.

என்னவென்றால் இன்றைய தேர்தல்பிரசாரத்தில் ஒருவராவதுஒரு அபேட்சகரைப்பற்றியாவது வெளியில் எடுத்துச் சொல்லி ஓட்டுக் கேட்காமல் "ஆசாமி எப்படி இருந்தாலும் அவர்களைப்பற்றிக் கவனிக்காமல் காந்தியாருக்காக ஓட்டுப் போடுங்கள். காங்கிரஸுக்காக ஓட்டுப்போடுங்கள்" என்று கேட்பதே போதுமானதாகும். சோம்பேறிகள், கயர்வளிகள்உடம்பில் பட்டை பட்டையாக நாமம் போட்டுக்கொண்டு கையில் மஞ்சள் துணி சுற்றின செம்பை வைத்துக்கொண்டு "திருப்பதிவெங்கடாசலபதிக்குத் தர்மம் செய்யுங்கள், ஏழுமலையானுக்குத் தர்மம் செய்யுங்கள்" என்று கேட்பதற்கும் "ஆட்களைக் கவனிக்காதீர்கள், காங்கிரஸுக்கு ஓட்டுச்செய்யுங்கள், காந்திக்கு ஓட்டுச் செய்யுங்கள்" என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றோம்.

ஆகவே ஓட்டர்களாகிய தோழர்களே தேர்தல் புரட்டுகளையும் வெட்கமற்ற—மானமற்ற—யோக்கியமற்ற—நாணயமற்ற பிரசாரங்களையும் கண்டும், கேட்டும் ஏமாற்றமடைந்துவிடாமல் மனிதர்கள், அவர்கள் முன் பின் நடவடிக்கைகள், அவர்கள் நடந்துகொள்ளப்போகும் முறைகள், அவர்களது கொள்கைகள், வேலைத் திட்டங்கள் ஆகியவைகளைக் கவனித்து ஓட்டுச் செய்யுங்களென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

---

## ஈ. வெ. ராமசாமி.

தோழர் E. V. ராமசாமி அவர்கள்16.10-34ந் தேதி ஈரோட்டைவிட்டு சென்னைக்குச் சென்றார். அங்கு பல கூட்டங்களில் பேசிவிட்டு 19-10.34ந் தேதி நெல்லிக்குப்பம் சென்றார். மீண்டும் சென்னை சென்று21-10.34ந் தேதி வரை சென்னையில் பல கூட்டங்களில் பேசிவிட்டு 22-10-34ந் தேதிவாக்கில் ஈரோடு வருவார்.

---

## மன்னார்குடி வழக்கு தள்ளப்பட்டது.

"பகுத்தறிவு" ஆசிரியர் தோழர் E.V.கிருஷ்ணசாமி அவர்கள் மீது மன்னார்குடியில் நடைபெற்ற மான நஷ்ட வழக்கு மன்னார்குடி டிப்டிகலெக்டரால் தள்ளுபடி செய்யப்பட்டது.

---

## "குடி அரசு"

"குடி அரசு" என்னும்பெயரால் மாதப் பத்திரிகை நடத்துவதற்கு கோவை ஜில்லா கலெக்டரவர்களிடம் அனுமதி கேட்டிருந்தோம். சென்ற வாரம் நமக்கு அனுமதி கிடைத்து விட்டது. விரைவில் பத்திரிகை வெளிவரும்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சுயராஜ்யக் கக்ஷியின் காரியதரிசியாயிருந்த தோழர் டி. பிரகாசம் அவர்கள் சொன்னதே போதும் எனக்கருதுகிறேன். அவர் கூறியதாவது:—

"காங்கிரஸ்காரர்கள் தங்கள் கூட்டத்தாரில்சிலருக்கு தாலுக்காஜில்லா போர்டுகளில் நாமினேஷன் வாங்கிக் கொடுக்கும் பொருட்டும், மற்றும் பல உதவிகளைப் பெறும் பொருட்டும் மந்திரிகளின் வீட்டு வாசற்படியண்டை இரவு பகலாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களைக் காணவேண்டுமென்றால் மந்திரிகளின் வீட்டு வாசலண்டை எந்த நேரத்திலும் காணலாம்."

இதே பேர்வழிகள் இன்று சட்டசபைக்குச்சென்று சர்க்காருக்கு முட்டுக்கட்டைபோட்டுப்பூரண சுயராஜ்யம் கொண்டுவரப்போவதாக வெட்கமின்றி சொல்லித் திரிகிறார்கள். அந்த வெட்கம் கெட்ட பேச்சையே இன்றும் வாக்காளர்களுக்குச் சொல்லி நாடகம் நடிக்க முற்பட்டிருக்கின்றனர். அந் நாடகத்தில் முதன்மையான நடிகராக சத்திய மூர்த்தி விளங்குகிறார். சுயராஜ்யக் கக்ஷிக்காரர்கள் முன்பு சென்னை சட்டசபையில் நடந்துகொண்ட மாதிரியை நினைவுக்குக்கொண்டு வந்து பார்ப்பவர்களுக்கு இன்று அவர்கள் செய்யும் வாக்குறுதிகளின் யோக்யதை கட்டாயம் விளங்குமென்றே நினைக்கிறேன்.

### சிறைசென்ற படலம்.

தோழர் சத்தியமூர்த்தி தான் செய்த தியாகத்தைப்பற்றி வானத்திற்கும், பூமிக்குமாகப் பேசுகிறார். அதில் முக்கியமாகத் தான் நாட்டிற்காகச் சிறைசென்றதைப் பற்றிஅடிக்கடி பெருமைப் படுத்திப் பேசி வருகிறார். அந்தப்பரமதியாகி சிறைசென்றதின் ரகஸ்யத்யதை உங்களுக்குச் சொல்ல இது நல்ல சமயமென்றே கருதுகிறேன். பொது மக்களும் அவர் சிறை சென்றதின் உண்மை வரலாறுகளை அறிய வேண்டிய தவசியம்.

சட்ட மறுப்பு இயக்கத்தில் நம்பிக்கையில்லாத கூட்டத்தாரில் சத்தியமூர்த்தியும் ஒருவர். ஜெயிலுக்குப் போவதால் எதும் பயனில்லை. அது வியர்த்தமான வேலை என்று எண்ணுகிறவர்களில் அவரும் ஒருவர். ஜெயிலுக்குப் போகாமல் தப்பித்துக்கொள்வதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அதெல்லாம் செய்து பார்த்தவர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே (கரகோஷம்) இவர் ஜில்லா காங்கிரஸ்கமிட்டியின் தலைவராயிருந்ததால் ஜெயிலுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் அதிகமாயிற்று. சாக்குப் போக்குகள் சொல்லி தப்பித்துக் கொள்ளவும் வழியில்லை.

இவ்வளவு நிர்ப்பந்தத்திற்குப் பிறகு தான் அவர் தாய் நாட்டிற்காகச் சிறை செல்ல முன் வந்தார். அதுவும் எப்படிச் சென்றார் தெரியுமா? நம்முடைய பிராமணரல்லாத தொண்டர்களைப் போலவும், தலைவர்களைப் போலவும் தடியடிபட்டுச் சென்றாரா? எவ்வளவு நைசாக, சௌகரியமாக, உடம்பு நோகாமல்போக முடியுமோ அவ்வளவு நைசாகவும், உடம்பு நோகாமலும் சிறை சென்றவர் நமது சத்தியமூர்த்தி.

ஒரு சமயம் தோழர் சத்தியமூர்த்தி கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் ஓர் கடையினுள் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பகிஷ்காரத் துண்டுப் பிரசுரங்களை ஜனங்களுக்கு வினியோகித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரை போலீசார் கைதிசெய்து மாஜிஸ்ட்ரேட் முன் நிறுத்தினார்கள். அது சமயம் மாஜிஸ்ட்ரேட் சத்தியமூர்த்தியைப் பார்த்து "ஐயா சத்திமூர்த்தியே இவ்வளவு மலிவான விலையில் நான் உன்னை பெரிய வீரனாக்க விரும்பவில்லை" என்று சொல்லி எச்சரித்து விடுதலை செய்து விட்டார். இது உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன்.

சில தினங்கட்குப் பின், சத்தியமூர்த்தி சிறைக்குச் செல்லாததைப் பற்றி ஜனங்கள் அவரை இழிவாகவும், பயங்கொள்ளி என்றும் பேசத் தலைப்பட்டு விட்டார்கள். பாழும் சனியன் அவரை விட்டதாகக் காணோம். எப்படியாவது சிறைக்குப் போய்த்தானாக வேண்டும். போகாவிட்டால் மானம் போய்விடும் போலிருக்கிறது. இந்தத் தடவை எப்படியாவது ஜெயிலுக்குப் போய் விட வேண்டுமென திடப்படுத்திக்கொண்டார். கணக்கற்ற இளைஞர்கள் போலீஸ் தடியடிபட்டு ஜெயிலுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள்.

உயிர்போனாலும் அம் மாதிரிபோக ஒப்புக்கொள்ளவே மாட்டார். உடனே யுக்தி செய்தார். ஒரு மோட்டார்கார் சம்பாதித்து அதில் ஏறிக்கொண்டார். பகிஷ்காரத் துண்டுப்பிரசுரங்கள் சிலதைக் கையில் எடுத்துக்கொண்டார்.காரில் உட்கார்ந்தவண்ணமே அவைகளை ஜனங்களுக்குக் கொடுத்துக்கொண்டே போனார். இம் மாதிரி செய்வது பெரிய குற்றமாகாதென்றும், அப்படி கைதிசெய்துகொண்டுபோனாலும் கடுமையான தண்டனைக்குட் படுத்த மாட்டார்களென்றும் முழு நம்பிக்கையோடு தான் சத்தியமூர்த்தி மோட்டார்கார் சட்ட மறுப்பில் இறங்கினார். ஆனால் அவர் நம்பிக்கையில் மண் விழுந்து விட்டது. 18 மாத சிறை தண்டனை விதித்து விட்டார்கள். சிறைக்கு உத்திரவான அதே இடத்தில் தன்னை "ஏ" வகுப்பில் போடும்படியாக மாஜிஸ்டிரேட்டை மன்றாடிக் கேட்டுக்கொண்டதின் பேரில் மாஜிஸ்டிரேட்டும் மனமிரங்கி அவ்விதமே அனுமதித்து வேலூர் சிறைக்கு அனுப்பினார். வேலூர் சிறையில் இருந்த காலையில் தன்னுடைய சகோத

ரக் கைதிகளின் வெறுப்பையும், கவனியாமல், சிறை சூப்ரின்டெண்டையும், அந்த சிறைக்கு அடிக்கடி பார்க்கப்போகும் ஜஸ்டிஸ் கக்ஷிப் பிரமுகர்களையும் கெஞ்சிக்கேட்டு தனக்கு வேண்டிய சௌகர்யங்களைப் பெற்றார். சத்தியமூர்த்தி சிறையிலிருக்கும்போது ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் அவருக்கு எவ்வளவோ உதவியும், சௌகரியங்களும் செய்துகொடுத்தார்கள் (காகோஷம். சபாஷ், சபாஷ்) கொஞ்சகாலம் பொருத்து உடம்பு அசௌக்யமென்ற காரணத்தினால் அவரை ஜனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். அங்கே அவர் நான்கு மாதங்கள் தங்கியிருந்தார். ஆஸ்பத்திரியிலிருந்த காலத்தில் அவர் சுதந்திர மனிதனைப்போல் யாரை வேண்டுமானாலும் பார்க்கவும், யாருக்கு வேண்டுமானாலும் கடிதங்கள் எழுதவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதோடு, அவருக்கு தன்னுடைய சொந்த வீட்டிலேயே காண முடியாத முதல் தரமான சாப்பாடும், மிகவும் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்த சகல சௌகரியங்களையும் சத்தியமூர்த்தி ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களின் தயவினாலும், காருண்யத்தினாலும் பெற்றார். மேலும் அவர் குறிப்பாக ஜஸ்டிஸ் கக்ஷிப் பிரமுகர்களின் உதவியை நாடி அதன் பயனாகஜனரல் ஆஸ்பத்திரியிலிருந்து குறித்த காலத்திற்கு முந்தியே விடுதலை பெற்றார். இன்னும் பச்சையாகச்சொல்ல வேண்டுமானால் சத்தியமூர்த்தி தண்டனைக்காலம் முடியும் முன்னம் விடுதலை செய்யப்பட்டதற்கு முக்கிய காரணமாய் இருந்தவர் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரரும், மற்றும்பல வெள்ளையர்களும் என்று உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் பகிரங்கமாய்ச் சொல்ல வேண்டுமென்றால் அந்தக் காலத்தில் எக்ஸிகியூடிங் கௌன்சிலராயிருந்த ஒரு ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் உதவியும், தயவும் இல்லாவிட்டால் இந்த சத்தியமூர்த்தி தண்டனைக் காலம் முடியு முன் விடுதலை பெற்றிருக்க முடியாது.

சென்னை கார்ப்பரேஷனில் இந்த சத்தியமூர்த்தியின் ஸ்தானம் காலியாய்க் கிடந்தது. சத்தியமூர்த்தியே மறுபடியும் அந்த ஸ்தானத்திற்கு மெம்பராகப் பிரயாசைப் பட்டார். சர்க்கார் சில காரணங்களைக்காட்டி அவர் கௌன்ஸிலராக வர யோக்கியதையில்லை எனத் தடை செய்தது. அந்த சமயத்தில் யாரிடம் மண்டியிட்டார் தெரியுமா? ஜஸ்டிஸ் கக்ஷிக் கௌன்ஸிலர்களிடமும், சில வெள்ளையரிடமும் தான். மேற்கண்டவர்களே (அவர்களில் நானும் ஒருவன்) சர்க்கார் விதித்த தடைகளை எல்லாம் நீக்கும்படி செய்து சத்தியமூர்த்திக்கு மதிப்பு சம்பாதித்துக் கொடுத்தனர்.

சுருங்கக் கூறவேண்டுமானால், சத்தியமூர்த்தி தனக்கு கஷ்டம் வரும் போதெல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களிடம்தான் சரண்புகுந்தார். நாங்கள் அவருடைய நிலைமையைக்கண்டு பரிதாபப்பட்டு எல்லாக் காலங்களிலும் அபயமளித்தோம். மனிதனிடம் நன்றியறிதல் என்பதான ஒரு குணம் ஒரு துளியாவது இருக்கவேண்டுமென்பது உண்மையானால் தோழர் சத்தியமூர்த்தி ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களுக்கு, அவர்கள் ஆபத்துக்காலங்களில் அளித்த உதவிகளுக்காக மனப்பூர்வமான நன்றியறிதலைக்காட்டியே தீரவேண்டும். அதற்கு மாறாக நாம் இன்று என்ன காண்கிறோம்? நன்றிகெட்ட வகையில், மனம் புண்படும்படியான சொற்களைக் கொண்ட ஓர் பிரசங்கத்தைகோக்கலே ஹாலில் செய்திருக்கிறார். அங்கு என்ன சொன்னார் என்றால் தனக்கு தடைகள் ஏற்படுத்திவிட்டதால், தான் அஸம்பிளிக்கு நிற்கப் போவதில்லை என்று சொன்னார். சத்தியமூர்த்தி என்பவர் எலக்ஷன் பிரசாரமே உருவாக வந்தவர் என்றுதான் அவர் சொல்லுவதிலிருந்து நமக்குத் தெரிகிறது. மேலும், ''ஜஸ்டிஸ் கக்ஷிக்குப் பூரண அதிகாரமில்லை. பிரத்தியேக அதிகாரம் படைத்த அரசாங்கத்தினிடமாவது கொஞ்சம் பெருந்தன்மையிருக்கிறது'' என்று சொல்லுகிறார். இவ்விதம் சொல்லுவது உண்ட வீட்டில் கன்னம் வைப்பதேயாகும். அவர் மேற்சொன்ன வார்த்தைகளின் அர்த்தமென்னவென்றால்; ஜஸ்டிஸ் கக்ஷிக்கு பூரண சுதந்திரமும், அதிகாரமும் இருக்குமானால் தன்னை அபேக்ஷகனாக நிற்கமுடியாத வகையில் தடைகள் ஏற்படுத்தி விட்டிருக்கும் என்பதாகும்.

## நன்றி கெட்டதனம்.

சத்தியமூர்த்தியினிடம் பெருந்தன்மையை யார் காட்டியதாகவிருந்தாலும், சத்தியமூர்த்திக்கு எள் மூக்கத்தனையாவது பெருந்தன்மை இல்லையென்பது மாத்திரம் நிச்சயம். வடிகட்டிய நன்றி கெட்டதனமே அந்த மஹானுபாவனின் இயற்கைச் சுபாவமென்று தெரிகிறது. முனிசிபல் கௌன்சிலராக வரமுடியாத வகையில் இவருக்கிருந்த தடைகளை எல்லாம் போக்கி கௌன்சிலர் யோக்யதையை வாங்கிக்கொடுத்த ஜஸ்டிஸ் பார்ட்டி இப்போது தடைகளை விதித்திருக்கிறது என்று சொல்லுவது பொருந்துமா என யோசித்துப் பாருங்கள். மேலும் ஜஸ்டிஸ் பார்ட்டிக்கும், அஸம்பிளி தேர்தல்களுக்கும் சம்பந்தமே கிடையாது. எலக்ஷன் விதிகள் ஏற்பாடுகள் யாவும் டில்லியிலிருந்து பிறக்கின்றன. விஷயம் இப்படியிருக்க 'ஜஸ்டிஸ் பார்ட்டி காங்கிரஸ்காரர்களுக்கு தடைகள் ஏற்படுத்துவதின் மூலம் அவர்கள் போட்டியிடாதவாறு செய்ய முயற்சிக்கிறது' என்று சொல்லுவது ஜஸ்டிஸ் பார்ட்டியிடம் பொதுமக்களின் வெறுப்பை தூண்டிவிடுவதற்காகவே. உண்மையைக் கூறவேண்டுமானால் அஸம்பிளியில் இருந்த ஜஸ்டிஸ் பார்ட்டிக்காரர்கள் அடிக்கடி வைஸ்ராயிடமும், சர்க்கார் நிர்வாக மெம்பர்களிடமும் போய் காங்கிரஸ்காரர்களின் விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். அதோடு காங்கிரஸ்காரர்கள் அஸம்பிளிக்கு நிற்பதைத் தடுக்கும் தடைகளை நீக்கும் பொருட்டும், காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்கு வர நல்ல சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு சட்டசபையை உடனே கலைத்துவிட வேண்டுமென்றும் அடிக்கடி போராடியிருக்கிறார்கள். அப்படிப் போராடியவர்களில் நானும் ஒருவன் என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதைப் பொய் என்று சொல்ல யாருக்காவது தைரியமுண்டாவெனக் கேட்கிறேன். தைரியமிருந்தால் ஆண்மையோடு முன் வரட்டும். சிறையிலிருந்த காலத்திலும், தேக அசௌக்யத்தால் ஆஸ்பத்திரியில் இருந்த காலத்திலும் ஜஸ்டிஸ் பார்ட்டியிடமிருந்து அநேக உதவிகளைக் கேட்டுப்பெற்ற இந்த கனவான் 'வளர்த்த கிடாய் மார்பில் பாய்ந்தது' என்னும் கதைக்கொப்ப ஜஸ்டிஸ் பார்ட்டியை கண்டபடி தூஷிக்க வந்துவிட்டார்.

தோழர் கே. வி. அழகர்சாமி பேசியதின் சாரம்:---

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாராய் இருந்தவர் இப்போது ''ராஜாஜி''யாக மாரிவிட்டதாகத்தெரிகிறது. 'ராஜாஜி' என்றால் என்ன அர்த்தம். அந்தப்பட்டத்தை யார் வழங்கியது?எப்போது? என்றுவிளங்கவில்லை அது எப்படியோ கிடக்கட்டும். தோழர் சத்தியமூர்த்தியின் கோக்கலே ஹால் பிரசங்கத்தைச்சற்றுகவனிப்போம். காங்கிரஸ்காரர்கள் எல்லோரும், மனோ,வாக்கு, காயங்களில் அஹிம்சா தர்மத்தை கடைபிடித்து நடக்கவேண்டுமென்பது அவர்களுக்கு இருக்கவேண்டியமுக்ய லக்ஷணம். எந்த காங்கிரஸ்காரர் அவ்விதம் நடந்துகொள்ளுகிறார் எனக்கேட்கிறேன். இதை மெய்ப்பிக்க தோழர் சத்தியமூர்த்தியின் கோக்கலே ஹால் பிரசங்கம் ஒன்று போதாதா எனக்கேட்கிறேன். பழுத்த தேசபக்தர், தலைவர்களில் ஒருவர் என்பவரின் நடவடிக்கையே இப்படியிருக்குமானால் மற்றவர்களைப்பற்றி விஸ்தரிக்கவும் வேண்டுமோ? சத்தியமூர்த்தி ''நான் பிரிட்டிஷ்—விரோதி'' ''நான் பிரிட்டிஷ்—விரோதி'' என்று தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கூறிக்கொள்ளுகிறார். இது எவ்வளவு தூரம் மெய் என்று பார்க்கலாம். தோழர் சத்தியமூர்த்தி 1926ல் இங்கிலாந்தில் இருந்தார். அப்போது ''மார்னிங் போஸ்ட்'' என்னும் பத்திரிகைக்கு 7-11-1926ல் இவர் எழுதியனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறதாவது; ''தங்கள் தேசத்தைத் தாங்களே ஆளக்கூடிய யோக்யதையும், சாமர்த்தியமும் இந்தியர்களுக்கு இன்னும் வரவில்லை என்று உங்கள் பத்திரிக்கைசொல்லுவதை நானும் ஆமோதிக்கிறேன்'' (வெட்கம். வெட்கம்.) தோழர் ராமசாமி முதலியாரும் அந்த சமயம் இங்கிலாந்திலிருந்தார். ''மார்னிங் போஸ்ட்''டில் சத்தியமூர்த்தி எழுதியிருந்ததைப் பார்த்தார். உடனே ''இந்தியர்களுக்கு தங்கள் நாட்டை தாங்களே ஆள முழு யோக்யதையும், சாமர்த்தியமும் இருக்கிறது. சத்தியமூர்த்தி கூறுவது புரட்டு'' என்று நல்ல சாட்டையடி கொடுத்தார்.

பின் சிலர் பேசியதும் தலைவர்முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்பெயின்.

ஒன்றன் பின் ஒன்றாக ஐரோப்பாவில் உள்ள தேசங்கள் சர்வாதிகாரத்துவத்திற்குள்ளாகும்போது ஸ்பெயின் மாத்திரம் சும்மா இருக்குமா? ஸ்பெயினும் சர்வாதிகாரத்துவத்தை நிலைநிறுத்த பெரும் பாடுபட்டது. எனவே 1923-ம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ந் தேதி ஸ்பெயினில் சர்வாதிகாரத்துவம் புகுத்தப்பட்டது. ஜெனரல் பிரிமோ மரிவேரா என்பவரே அப்பொழுது சர்வாதிகாரியாக முன்வந்தார். ஆனால் அவர் சர்வாதிகாரியாக வந்து ஆறு வருடங்களும், 4 மாதங்களும் ஆன பின்னர் தமது பதவியை அவர் ராஜீனாமாச் செய்துவிட்டார். அவர் ராஜீனாமாச் செய்ததும் முன்போல் பொதுஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்சியைப் புகுத்தப் பட்டது.

## ருமேனியாவும், ஹங்கேரியும்.

இதுவரை முழு சர்வாதிகாரத்துவத்துக்குள் புகுந்த நாடுகளைப்பற்றிக் கூறப்பட்டது. இனி சர்வாதிகாரத்துவத்தைப்போன்ற ஆனால் பெரும்பாலும் சர்வாதிகாரத்துவக்கொள்கையடங்கிய ஆட்சிக்குள் புகுந்த நாடுகளைப்பற்றிக் கூறவேண்டுவது அவசியம். இத்தகைய முறையை ஒப்புக்கொண்டுள்ளவைகள் ருமேனியாவும், ஹங்கேரியுமாகும். எனவே இவை இரண்டும் உள்பட இன்றைய ஐரோப்பாவில் 10 நாடுகள் சர்வாதிகாரிகள் கைகளில் புகுந்து கொண்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்து இன்னும் பல நாடுகள் நாக்கில் ஜலம் சொட்டிக் கொண்டிருக்கின்றன. வேறு சில நாடுகள் இவைகளின் தத்துவங்களில் சிலவற்றைக் காப்பியடித்துள்ளன. இத்தகைய நாடுகள் என்று சர்வாதிகாரத்துக்குள்ளாகும் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. அவைகளைச் சர்வாதிகாரத்துக்குள்ளாக்க முந்திய மகாயுத்தத்தைப்போன்று மற்றொரு மகாயுத்தமொன்று தேவைப்படுமோ என்று சொல்லுவதற்கில்லை.

இவை தவிர முடியரசு ஒழிந்து குடி அரசாக்கப்பட்ட பல தேசங்களுமிருக்கின்றன. வீ—கே

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளாமல் வெறுத்து வந்த சோஷியலிஸ்ட் ரஷியா தற்போது சர்வ தேச சங்கத்தில் சேருவதைக் கண்ட மதப்பித்தும், முதலாளித்துவக்கிறுக்கும்சேர்ந்து உருவாகிய டிவாலரா "ரஷியா கடவுளையும், மதத்தையும் ஒழித்த நாஸ்திக நாடு. அதிலும் முதலாளித்துவத்தை அடியுடன் அழித்து சோஷியலிசத்தை ஏற்படுத்தியிருக்கும் நாடு. ஆகையால் அதை நாம் சர்வ தேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடாது" என்று கதறினாராம்.

இத்தியாதி முறைகளில் முதலாளித்துவ தேசங்கள் எல்லாம் சோஷியலிசத்தை பரவவிடாதபடி அடக்கு முறைகளைக் கையாண்டு அடக்கி வருகின்றன. இன்றைய உலகமே முதலாளித்துவ உலகமாயிருப்பதால் முதலாளிகளை எதிர்த்து நிற்பதற்குப் போதிய பலம்ஏழைச் சோஷியலிஸ்ட்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. இதனால் சோஷியலிஸ்ட்கள் முதலாளித்துவ உலகத்தின் அடக்குமுறைகளுக்கு உட்பட்டு வருகின்றன.

இது நிற்க இன்னொருபுறம் சோஷியலிசத்தை விளங்கிக்கொள்ளாதஒரு கூட்டம் இருந்துகொண்டு பொதுஜனங்களை சோஷியலிசத்தை ஆதரிக்க விடாமல் செய்து வருகின்றன. அவர்கள் யாரெனில்

### சோஷிய லிஷத்தை விசாரித்துணராதோர்

முதலாளித்துவ மதங்கள் சொல்லும் உலக சுபாவத்தை ஒப்புக்கொண்டிருக்கும் மதஸ்தர்களும், தான் முதலில் "சரி" யென்று ஆரம்பித்த இயக்கம் தற்போது தப்பாக இருப்பதை அனுபோகத்தில் விளங்கியும் தான் முதலில் ஆரம்பித்த கொள்கையையே அது எவ்வளவு தப்பாக இருந்தாலும் அதையே தான் இறுதிவரையிலும் நிலைநிறுத்த வேண்டும் என்னும் மூடப்பிடிவாத முள்ள அரசியல் வாதிகளும், தேசிய வாதிகளும், தலைவர்களும் சோஷிய லிசத்தை விசாரித்துணராமல் மனம் போன போக்கில் "சோஷியலிசம் தப்பு,அது நமது நாட்டிற்குப் பொருந்தாது" என்று சொல்லியும், எழுதியும் வருகிறார்கள். இத்தகையவர்களுக்கு சோஷியலிசம் என்பதைப்பற்றிபாலபாடமேனும் தெரியாதுஎன்பதாக அவர்கள்சொல்லிவருவதிலிருந்தும்,எழுதிவருவதிலிருந்தும் தெரிகின்றன.

முதலாளித்துவம் Capitalism என்பதென்ன? முதலாளித்துவத்தால் இன்றுவரையிலும் நிகழ்ந்துவருவதென்ன? சோஷியலிசம் Socialiam என்ப தென்ன—சோஷியலிசப்படி ஏற்படப்போவதென்ன? என்னும் பிரச்சினைகளை விசாரித்துணராமல் மனம்போனபோக்கில்பேசிவரும் மதஸ்தர்களும்,அரசியல்வாதிகளும்,தேசியவாதிகளும் தலைவர்களும் "தான் விசாரித்துணராத முட்டாள்" என்று சோஷியலிஸ்டுகள்முன்பாக அவர்களே நிரூபித்து வருகிறார்கள்.

### முதலாளித்து வத்தைப்பற்றிய ஒரு நிருபணம்

(Copilalistworld) முதலாளித்துவ உலகத்திலேயே செல்வத்தால் நிறைந்த தேசம் என்று உலகத்தோர் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய "ஐக்கிய குடி அரசு அமெரிக்கா" வில் இன்று நடைபெற்று வருகிற முதலாளித்துவத்தைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால் முதலாளித்துவத்திலுள்ள அக்கிரமமான தன்மைகள்விளங்கி விடும்.

(இக்கட்டுரையின் முக்கியபாகமாகிய ஐக்கியகுடி அரசு அமெரிக்காவைப்பற்றிய பாகத்தை இரண்டாவது கட்டுரையில் எழுதுவாம்.)

## 90 வினாடியில் 115 விவாக ரத்து!

பிரிட்டனில்-ஏன்? மேனாடுகளில்-விவாகரத்து என்பது சர்வசாதாரணமாயிருக்கின்றது. உடைகளை மாற்றிக்கொள்வதற்காவது கொஞ்சம் காலதாமதமாகும். அதைவிட சீக்கிரமாக மேனாட்டில் பெண்கள்கொண்ட கணவரையும், ஆண்கள் கைப்பற்றிய மனைவியரையும் களைந்து கொண்டு விடுகிறார்கள். இதென்ன ஐயா? இப்படி நடக்குமா? இவ்வாறு சொன்னால் அதை நம்பலாமா? என்று நீங்கள் கேட்பீர்கள். ஆதாரமில்லாமல் இப்பத்திரிகைகளில் நாம் ஒன்றையும் எழுதமாட்டோமென்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. மூன்று வாரங்களுக்கு முன்பு லண்டன் விவாகரத்துக் கோர்ட்டில் 115 தம்பதிகள் விவாகரத்துப் பெறுவதற்காக வந்து கூடினார்களாம். 115 வழக்குகளையும் அந்தக் கோர்ட்டு நீதவான் 90 வினாடிகளில் ஆராய்ந்து விவாகரத்துக்குத் தீர்ப்புக்கொடுத்து விட்டாராம். 90 நிமிஷங்கள்கூட ஆகவில்லை. ஒன்றரை நிமிஷ நேரத்தில் 115 விவாகரத்துக்கு கோர்ட்டார் லண்டனில் அனுமதி கொடுத்து விட்டார்களென்று லண்டன் பத்திரிகைகளே எழுதுகின்றன. கதைப்புத்தகங்களிலாவது இப்படி ஒரு நிகழ்ச்சியை நீங்கள் படித்திருக்கிறீர்களா? இது தான் நாகரீகத்தின் சிறப்பு! நினைத்தால் கல்யாணம்! வேண்டாமென்று சொன்னால் அந்த வினாடியிலேயே விவாகரத்து! 90 விநாடியில் 115 வழக்கைத் தீர்க்கும் லண்டன் கோர்ட்டாரிடம், 90 மாதமாக ஒரே வழக்கை விசாரிக்கும் இலங்கைநீதிபதிகள். பாடம் படிக்கவேண்டும்!(வீ—கே)


## கொளும்பு.

இவ்விடத்தில் குடி அரசுப்பதிப்பக புஸ்தகங்களும், பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக புஸ்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்.

விலாசம்:—

K. N. S. Pillai,
News Agent 281, 2nd Div.
மருதானை, கொளும்பு.


## ஹரிஜனங்கள் காபி சாப்பாடு விடுதி.

திருநெல்வேலி ஜங்ஷன் (பாலம்) பஜாரில் ஹரிஜனங்களால் காபி, சாப்பாடு விடுதியொன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவ்விடுதியை திருநெல்வேலி ஜில்லா ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவர் சாவடி, திரு. எஸ். கூத்தநயினார்பிள்ளை திறந்து வைத்தார். ஹிந்துக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திரு. பி. கே. அருணாசலம் அவர்கள் பேசினார் அவர் பேசும்போது திருநெல்வேலியில் ஹரிஜனங்களால் நடத்தப்படும் விடுதியொன்று அவசியமென்றும், ஜாதி வித்தியாசம் பாராட்டாதவர்கள் அவ்விடுதிக்குச் சென்று ஆதரிக்க வேண்டுமென்றும் பேசினார்.


## ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

## மனித உற்பவம்.

இஃது தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல், அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தியும், ஒற்றைப்பைக்கிருமி முதல் மனிதன் வரையுள்ள ஜீவராசிகளின் இயற்கைத்தோற்ற வரலாறும், குரங்கே மனிதனாக மாறியுள்ளான் என்பதும் தெளிவாக விளக்கியுள்ளது. தமிழ் மக்களனைவரும் தவறாது வாசிக்க வேண்டிய நூல் 112 பக்கம் கொண்டது. விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

சமதர்ம பிரசுராலயம்
22, சவுத் பீச், திருவல்லிக்கேணி
சென்னை

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## சமதர்மக் கீதங்கள்.

இயற்றியது.
தோழர் ப. ஜீவானந்தம்
விலை பை. 6.

கிடைக்குமிடங்கள்:—

குடி அரசு பதிப்பகம்
ஈரோடு.

சமதர்மக் காரியாலயம்.
ஜோலார்பேட்டை

## பெண்களுக்கோர் வார்த்தை.

சூதக வயிற்றுவலி, சூதக வாய்வு, சூதக கட்டி முதலிய சூதக சம்பந்தமான சகலநோய்களுக்கும்

# கல்லுப்பு செந்தூரம்.

இம் மருந்தில் அமைந்திருக்கும் ஆச்சரியமான குணத்தை இதைச் சாப்பிட்ட பெண்மணிகளுக்கே நன்கு விளங்கும்.

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இம்மருந்தை ஆயிரக்கணக்கான பெண்மணிகளுக்குக் கொடுத்து குணமடைந்ததைநேரில் பார்த்து இந்தப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது. மாதவிடாய் காலங்களிலுண்டாகும் சூதக வாய்வு, வயிற்றுவலி, சூதகக் கட்டி, சரியாய் விலக்கமாகாதிருத்தல், மாதவிடாய் சரியில்லாமல் கரித்தண்ணீர் போலும், கழனித் தண்ணீர்போலும், கதங்கலாயும், ஒரு நாளிரண்டு நாள் மட்டும் சொற்பமாய் காணுதல், மறுபடியில்லாதிருத்தல் 10 நாள் 8 நாள் முன் பின்னாகக் காணுதல் முதலிய சகல வியாதிகளையும் குணப்படுத்தி புத்திர சந்தானத்தைக்கொடுப்பதில் இதற்கு மிஞ்சிய மருந்தே கிடையாது. அனுபவத்தில் கைகண்ட மருந்து. சூதகக்கட்டிகளுக்காக ஆப்ரேஷன் செய்ய வேண்டியதில்லை. மருந்து சாப்பிடும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

விலை புட்டி 1-க்கு ரூ 3—0—0

குறிப்பு:— நமதிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ரூபாய் 3ம் வி. பி. செலவு ரூ 2-ம் ஆக ரூபாய் 5-ம் முன் பணமாய் அனுப்பவேண்டும்.

அரண்மனை வைத்தியர்
**S. T. மாணிக்கம் பிள்ளை,**
சித்த வைத்தியசாலை, ஈரோடு.
கோயம்புத்தூர் ஜில்லா.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியானல் காந்தியார் சென்ற வட்ட மேஜை மகாநாட்டின் யோக்கிதை இந்து முஸ்லீம் விஷயத்தில் சிரிப்பாய்ச் சிரிப்பானேன்? வகுப்புத் தீர்ப்பு விஷயமாய் இன்னமும் காங்கிரசுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரு முடிவு ஏற்படாமல் காங்கிரசுக்குள்ளாகவே பிளவு ஏன்?

டாக்டர் அம்பேத்காரைத்தீண்டப்படாதவர்கள் பிரதிநிதியல்லவென்ற காந்தியார் அவரோடு ராஜி செய்துகொள்ளப்பட்டினிகிடந்து அவர் கையெழுத்தைப் பெறுவானேன்?

தென் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாதார் 100-க்கு 95 பேர்கள் காங்கிரசை விட்டு வெளியேறித் தனி ஸ்தாபனம் ஏற்படுத்திச்சர்க்காரிடம் தங்கள் உரிமையைப் பெற முயற்சிப்பானேன்?

சட்டசபையிலும், மந்திரி சபையிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் பார்ப்பனரல்லாதார் கட்சியாரே நிறைந்து இருப்பானேன்?

காங்கிரஸ் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவன் தேசத்துரோகியென்றால் பண்டிதமாளவியா, மூஞ்சே, பாய் பரமானந்தா, ஆனே ஆகியவர்கள் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாய்ப் பிரச்சாரம் செய்து தேர்தல்களில் போட்டி போடுவானேன்?

தேசிய வாதிகளென்று சொல்லக்கூடிய முஸ்லீம்கள்கூட சர். அப்துல் ரஹீம் போன்றவர்கள் ஏன் காங்கிரசில் இல்லை? இவர்கள் எல்லாம் காங்கிரஸ் கொள்கைகளைப் பெரிதும் ஆதரிப்பதில்லையென்பது உங்களுக்குத் தெரியவில்லையா?

வகுப்புணர்ச்சி.

வகுப்புத் தீர்ப்பை மூடி வைத்துப் பேசுவது முஸ்லீம்களை ஏமாற்றவா அல்லவா வென்று கேட்கின்றேன்.

காங்கிரஸ்காரர்கள் உண்மையான தேசாபிமானிகளாய் எல்லா மக்களுக்கும் பிரதிநிதிகளாய் இருப்பார்களே யானால் எல்லா வகுப்பு மக்களையும் கூட்டி வைத்துப்பேசி ஒரு முடிவு செய்வதற்கு முயற்சிக்காமல் ஒவ்வொருவகுப்பிலும் ஏதோ இரண்டொரு சோணகிரிகளைச் சேர்த்துக்கொண்டு மற்றவர்கள் எல்லோரையும் வகுப்பு வாதி, தேசத்துரோகியென்று வைய விடுவதால் தாங்கள் வெற்றி பெற்று விடலாமென்று நினைப்பது ஏமாற்றத்தைத்தான் தருமேயொழிய வேறில்லை.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

20 வருஷங்களுக்கு முன்பே முஸ்லீம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தது போல் பார்ப்பனரல்லாதார் கேட்ட பிரதிநிதித்துவம் அப்போதே கொடுத்திருக்கும் பக்ஷத்தில் இந்நாட்டில் பார்ப்பனரல்லாதார் கக்ஷி தோன்ற இடமே இருந்திருக்காது. அல்லது நான் கேட்ட காலத்திலாவது பார்ப்பனர்கள் செவிசாய்த்திருப்பார்களானால் நானும் காங்கிரசை விட்டு ஓடி வந்திருக்கமாட்டேன்.

பார்ப்பனர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் இவைகளை யடக்கி விட்டதாகக் கருதிக்கொண்டார்கள். இன்று வட்டியும் முதலுமாய்த் தலைதூக்கி நிற்கின்றது. தந்திரத்தினால் இவைகளையும் அடக்கி விடலாமென்பதாகக் கருதாதீர்கள். மூடிவைத்த சிலந்திப் புண் அழுகிப் புழுத்து நாறுவது போல் இன்னமும் அதிகமாய் நாறப்போகின்றது என்பது உறுதி.

பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார், இந்து-முஸ்லீம், தாழ்த்தப் பட்டவர்கள்—மேல் ஜாதிக்காரர்கள், ஆகிய பிரச்னைகளைத் தீர்க்காமலும், அவரவர்கள் நன்மைக்குத் தனித்தனியே பிரிந்து அரசாங்கத்தை நத்தும்படியாகவும் செய்து விட்டு வெறும் தேசாபிமானப் பேச்சைப் பேசிக்கொண்டு தேர்தலுக்கு நின்றால் உலகை ஏமாற்றி விடமுடியுமா? என்று கேட்கின்றேன்.

சட்டசபைக்குப் போய் "ஜாதி வித்தியாசங்களை யொழித்து தீண்டாமையையொழித்து எல்லோருக்கும் கோவில், குளங்கள், சத்திரம், பள்ளிக்கூடம் ஆகியவைகளில் பிரவேச உரிமை வாங்கித்தருகின்றோம்" என்று பார்ப்பனரல்லாத மக்களிடத்திலும், தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும் சொல்லி ஓட்டுக் கேட்பதும், சட்டசபைக்குப் போனால் "சமூக சீர்திருத்தமோ கோவில் பிரவேசமோ, ஜாதி வித்தியாச ஒழிப்போ, கோவில் குளம், நுழைவோ ஆகிய இவைகள் சம்பந்தமான காரியம் ஒவ்றும் நாங்கள் இந்திய சட்டசபையில் செய்யமாட்டோம்; இதற்குச் சட்டமும் கொண்டு வரமாட்டோம்" என்று பார்ப்பனர்களிடமும், சனாதனிகளிடமும் சொல்லி ஓட்டுக்கேட்பதுமாய் இன்று தேர்தல் தந்திரப் பிரசாரம் நடைபெற்று வருகிறதென்பது உங்களுக்குத் தெரியாதா?

இந்தப்படி தோழர்கள் C. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், S. சத்தியமூர்த்தி முதலியதலைவர்களென்போர்கள் பேசி வருகிறார்களா இல்லையா? என்று கேட்கின்றேன்.

பட்டினியின் யோக்கியதை.

கோவில் பிரவேசம் வாங்கித் தருகிறேன் என்று டாக்டர் அம்பேத்காரிடம் சொல்லி ஏமாற்றிப் பட்டினி கிடந்து தனித்தொகுதியைக் குழிவெட்டிப் புதைத்து விட்டு இப்போது "பொதுஜனங்கள் ஆதரவில்லாததால் ஆலயப் பிரவேச மசோதாவை வற்புறுத்தக்கூடாது" என்று சொல்லுவதும், இனியும் சட்டசபையில் அப்படிப்பட்ட தீர்மானங்கள் கொண்டு வருவதில்லை யென்று வாக்குக் கொடுப்பதும் எவ்வளவு நாணயமும், யோக்கியமும் சத்தியமுமான நடவடிக்கை என்று பாருங்கள், இவர்கள்தான் சத்தியாக்கிரகிகளாம். சத்திய சோதனை செய்கின்றவர்களாம். சத்தியத்திற்காகப் பட்டினி கிடப்பவர்களாம்.

இந்தத் தேர்தலை எதிர்பார்த்தே வருணாச்சிரமிகளுடைய ஆதரவு இல்லாமல் போய்விடுமென்று பயந்தே ஆலயப்பிரவேச மசோதா கொலை செய்யப்பட்டு விட்டதென்பது எனது அபிப்பிராயம். சூட்சியும், தந்திரமும் எவ்வித நன்மையையும் செய்து விட முடியாது.

கேள்விகளும், பதில்களும்.

காங்கிரஸ்காரர்:—நீங்கள் ஆதரிக்கும் ஷண்முகம் செட்டியார் மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரா இல்லையா?

ஈ. வெ. ரா:—ஆம் மேளதாளத்தோடு வாங்குகிறார்.

கா:—அதற்காகத்தானே அவர் சட்டசபைக்குப் போகப்பார்க்கிறார்.

ஈ. வெ. ரா:—ஆம், அதற்கும், அதற்கு மேல்பட்ட பதவிக்கும் போகத்தான் போகிறார். இதில் என்ன தப்பு இருக்கிறது? தோழர் பட்டேல் காங்கிரஸ்காரராய், ஒத்துழையாதாராய் இருந்து இந்திய சட்டசபைக்குப் போய் முட்டுக்கட்டை போட்டுச் சர்க்காரை உடைத்து விடுவதாகப் பொதுஜனங்களிடம் சொல்லி சத்தியம் செய்துகொடுத்து விட்டு ஓட்டு வாங்கி அங்கு போன பிறகு மாதம் 4000 ரூபாய் சம்பளத்துக்கு அடிமையாகி சர்க்காரை முட்டுக்கட்டை போடுவதற்குப் பதிலாய் ஒழுங்காக நடத்திக்கொடுப்பதாகவும், ராஜ விஸ்வாசத்துடன் ராஜபக்தி உள்ளவராய் இருப்பதாகவும் சத்தியம் செய்துகொடுத்து மாதம் 4000 ரூ.சம்பளம்வாங்கினாரா இல்லையா? ஆனால் தோழர் ஷண்முகம் அப்படிச் செய்யவில்லை "நான் முட்டுக்கட்டை போடுகிறேன்" என்று சொல்லி ஓட்டுக்கேட்கவில்லை, "தேசபக்தர்" "தேசிய வீரர்" "தேசாபிமான சிங்கம்" என்கின்ற தோழர்பட்டேல்வாங்கியசம்பளத்துக்குமேல் ஒருகாசும் அதிகம் வாங்கவுமில்லை. இப்பொழுதாவது காங்கிரஸ்காரர்கள் தாங்கள் இந்திய சட்டசபைக்குப் போனால் பிரசிடெண்டு ஸ்தானம் (கிடைப்பதானால்) ஆசைப்படுவதில்லை யென்றோ, தாங்கள் பிரசிடெண்டுக்கு யாருக்கும் ஓட்டுச் செய்வதில்லை யென்றோ சொல்ல முடியுமாவென்று கேட்கின்றேன். (சிரிப்பு, கைதட்டலுடன் சிரிப்பு)

ஈ. வெ. ரா:—தோழர்களே! சிரிக்காதீர்கள். இன்னமும் இவர்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லப்போகிறேன். அவைஉங்களுக்கு ஒரு அறிவு விருந்தாகும். அதைக்கேட்டால் உங்களுக்குப் பசி கூட ஏற்படாது.

காங்கிரஸ்காரர்:— ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியாயிற்றே, அதை நீங்கள் ஆதரிக்கலாமா?

ஈ. வெ. ரா:—ஆம் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சிதான். ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், காங்கிரஸ்காரர்கள் 30, 40 வருஷகாலமாய் ஆடி வந்த உத்தியோக வேட்டையைத்தான் வேட்டை யாடிப்பிடிக்கிறார்களே தவிர வேறில்லை. ஆனால் காங்கிரஸ் காரியதரிசிகள், காங்கிரஸ் பிரமுகர்கள், தேசாபிமானிகள் ஆகிய சர். சி. பி. ராமசாமி அய்யர், கே. சீனிவாசய்யங்கார், வி. கிருஷ்ணசாமி அய்யர், சர். பி. எஸ். சிவசாமி அய்யர், மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆடியவேட்டைகளைத்தான் ஆடுகிறார்களேயொழிய—அவர்கள் வாங்கினசம்பளத்தைத்தான் வாங்குகிறார்களேயொழியப் புதிய வேட்டையொன்றுமில்லை. அதிக சம்பளமொன்றுமில்லை.

மற்றும் காங்கிரஸ் தேசாபிமானிகள் தங்கள் ஜாதிக்கு மாத்திரமே உத்தியோக வேட்டையாடினார்கள். ஜஸ்டிஸ் தேசாபிமானிகள் தங்களுக்கும் பார்ப்பனர்களுள்பட எல்லா மக்களுக்குமாக வேட்டை யாடுகிறார்கள். வேட்டையை இந்து, முஸ்

லீம், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டவர் ஆகிய எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுக்கிறார்கள். பழைய காங்கிரஸ் வேட்டைக்காரர்கள் இப்போது தங்களுக்கு வேட்டை கிடைக்கவில்லை யென்கின்ற காரணத்தால் வேட்டையைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். இப்போதும் பல காங்கிரஸ்காரர்களை எனக்குத் தெரியும். அவர்கள் தங்கள் அண்ணன் தம்பிகளையும், சிற்றப்பன் பெரியப்பனையும், மாமன் மச்சானையும், உத்தியோக வேட்டையாட விட்டுவிட்டு தாங்களும் முயற்சி செய்து பார்த்த வேட்டைக்கு லாயக்கில்லாதவர்களே பெரிதும் ஜெயிலுக்குப் போய் விட்டு வந்து இங்கு தேசாபிமானிகளாயிருப்பது எனக்குத் தெரியும்.

கா:—ஜஸ்டிஸ் கக்ஷி என்ன சாதித்தது?

ஈ. வெ. ரா:—ஜஸ்டிஸ் கக்ஷியானது தோழர் சி. பி. சுப்பையாவை மாகாண காங்கிரஸ் காரியதரிசியாக்கிற்று. இதைவிட வேறு என்ன வேண்டும். தோழர் வரதராஜுலுவைத்தென்னாட்டுத் திலகராக்கிற்று, என்னை மாகாண காங்கிரஸ் காரியதரிசியாகவும், பிரசிடெண்டாகவும் ஆக்கிற்று. இவை தவிர இதுவரை காங்கிரஸ் சாதித்ததையெல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷியும் சாதித்துவருகின்றது.

காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கே உத்தியோகம், படிப்பு முதலியவை இருக்கும்படி பார்த்து வந்தது. ஜஸ்டிஸ் கக்ஷி பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கும்படி பார்த்து வருகிறது.

எல்லா உத்தியோகங்களுக்கும் எல்லாப்பதவிகளுக்கும் பார்ப்பனரல்லாதாரும், லாயக்கும், உரிமையும் உடையவர்களே யென்று செய்து காட்டி மெய்ப்பித்து வருகின்றது.

உத்தியோக வேட்டையில் எல்லாருடைய சீட்டையும் ஒன்றாய்ப் போட்டுக் குலுக்குகிறது. இன்னம் என்ன வேண்டும்?

காங்கிரஸ்காரர் கேள்வி:—உத்தியோகம் தான் பெரிதா?

ஈ. வெ. ரா:— ஆம் இதுவரை தேசாபிமானிகள், காங்கிரஸ்காரர்கள், தேசியவீரர்கள் என்பவர்கள் பெரிதும் உத்தியோகத்தைலக்ஷியமாகக்கொண்டுதான் உழைத்து வந்திருக்கிறார்கள். இப்போதுபார்ப்பனரல்லாதார் அந்தக் கொள்கையைத்தேசாபிமானமாகக் கொண்டவுடன் பார்ப்பனர்கள் அதை தேசத்துரோகமென்று சொல்ல வந்து விட்டார்கள். பார்ப்பனர் அனுபவித்த காலம் எவ்வளவோ அவ்வளவு காலமும் அந்தவிகிதாச்சார எண்ணிக்கைக்குத்தக்கபடியும், அவ்வளவு பணமும் பார்ப்பனரல்லாதாரும் அனுபவிக்கும் காலம் வந்துவிட்டால் பிறகு ஜஸ்டிஸ் கக்ஷியே நமது நாட்டிற்கு வேண்டாமென்று நானே சொல்லுவேன்.

தவிரவும் உத்தியோகங்களை வேண்டாமென்று சொல்லக்கூடாது. அதன் சம்பளங்களைக் குறைக்கும்படி சொல்ல வேண்டும். உத்தியோகத்தின் மூலம் தான் அரசாங்கம் நடைபெறவேண்டும். அதைப் பெற ஒவ்வொரு பிரஜைக்கும் எந்தக்கட்சியானாலும், —ஜாதியானாலும் உரிமையுண்டு.

எலக்ஷன்களிலும், உத்தியோகங்களிலும் ஒரு யோக்கியமான முறை இல்லாத காரணத்தால் தான் எலக்ஷன்கள் வரும்போதும், உத்தியோகங்கள் வரும்போதும் நாட்டில் கலவரம், கக்ஷி பிரதி கக்ஷிச்சண்டைகள் நடந்து கொண்டு வருகின்றன.

எப்படியானாலும் வகுப்புச்சமரசமில்லாமல் நடைபெறும் தேசாபிமான வேலைகள் காந்தியார் நடத்துவதானாலும், யார் நடத்துவதானாலும், நாணயமாயும், நியாயமாயும், உண்மையாயும் நடத்த முடியாது. அது ஏற்படுகின்ற வரையில் நான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும், உத்தியோகத்தில் குறைந்திருக்கும் மக்களுக்கும் அனுகூலமாய்த் தான் இருப்பேன். அதற்காக ஆயிரம் தேசத்துரோகிகூட ஆவேன். வகுப்பு நியாயம்தான் எனக்கு எல்லாவற்றையும்விடப் பெரியது.

ஒருவன் பாடுபட்டும் பட்டினியாய்க்கிடப்பதும், ஒருவன் பாடுபடாமல் வயிறு புடைக்கத்தின்று புரளுவதும், ஒருவன் பலவேலைகளைக் கைப்பற்றித் தனது தேவைக்கு மேல் பயன் அடைந்து பாழாக்க, ஒருவன் செய்வதற்குக்கூட வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் தியங்க இவைகளுக்கு வகுப்பு ஆதிக்கமும், வகுப்பு வித்தியாசமும் காரணமாயிருப்பதென்றால் இவற்றை எப்படிச்சகித்துக்கொண்டு வகுப்பைப்பற்றியே கவலையில்லாத தேசாபிமானத்தை ஒரு மனிதன் ஆதரிக்க முடியுமென்று கேட்கின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சியை நான் ஆதரிப்பதைக் கண்டு நீங்கள் வயிற்றெரிச்சல் படுவதில் பயனொன்றுமில்லை. அது தைரியமாய்வகுப்பு நியாயத்தையும், வகுப்பு வித்தியாசங்களையும் உயர்வு தாழ்வுகளையும் ஒழிக்கச் சட்டம் செய்வதையும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை அமுல் நடத்துவதையும் கொள்கையாய்க் கொண்டு வேலை செய்து வருகின்றது.

அதன் பயனாய் இன்று இந்த நாட்டில் எல்லா ஜாதியாரும் உத்தியோகம் அனுபவிக்கிறார்கள்.

கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். அக்கட்சி மீது பொறாமைப்பட்டுப் பிரயோஜனமொன்றுமில்லை. இன்றைய நிலையில் அதை உங்களால் அசைக்க முடியாது. அதற்குக் கெடுதி செய்ய எண்ண எண்ண அது தேசமெல்லாம் வேரூன்றப் போகின்றது. அதன் பலக்குறைவு—குற்றம் எங்கிருக்கிறதென்பது எனக்குத் தெரியும். அதைச்சரிப்படுத்த நானும் முயற்சிக்கிறேனே யொழியச் சும்மா இருக்கவில்லை. ஆனால் அது காங்கிரசிலில்லையென்று கருதி விடாதீர்கள்.

## எனது ஒரு கேள்வி.

உங்களை ஒன்றுகேட்கின்றேன். இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி யிருந்து அது இந்த 20 வருஷ காலமாகச் செய்து வந்த அரசியல்-சமுதாய வேலையைவிட ஜஸ்டிஸ் கட்சி யில்லாத வேறு மாகாணங்கள் அதிகமாகச்செய்த ஒரு காரியத்தைச் சொல்லுங்கள் பார்ப்போம். மற்ற மாகாணங்களிலில்லாத கெடுதி இங்கு ஏதாவது இருக்கிறதா சொல்லுங்கள் பார்ப்போம். மற்ற மாகாணமந்திரிகள், இந்தியகவர்னர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ்கட்சிக்காரர்களா?

அங்கெல்லாம் ஜஸ்டிஸ்கட்சியில்லாததால் கவர்ன்மெண்டு ஒழிந்து போய் விட்டதா? உத்தியோகங்கள், சட்ட சபைகள், நிர்வாகசபைகள் காலியாகக் கிடக்கின்றனவா? தயவு செய்து யோசித்துப்பதில் கூறுங்கள்.

வீணாக இப்படி இந்தச் சூட்சிகளும், விஷமங்களும், துவேசமும், வலுக்க வலுக்க ப்பார்ப்பனப் பூண்டுகள் உத்தியோகங்களில் குறைந்து போவதோடு மாத்திரமல்லாமல் மறைந்து போகவும் நேரிடுமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

## கம்பளி போட்டு உட்காருவோம்.

காங்கிரசின் யோக்கியதையையும், ஜஸ்டிஸ்கட்சியின் யோக்கியதையும், நாணயமாய் வெளியாகவேண்டுமானால் கம்பளிபோட்டு எல்லோரும் உட்கார்ந்து ஒருபொது நியாயாதிபதியைவைத்து இருவரும்பேசுவோம். ஜஸ்டிஸ் கட்சியின் அக்கிரமங்களை, நாணயத்தவறுதல்களை நீங்கள் சொல்லுங்கள். காங்கிரஸ்—பார்ப்பனர் அக்கிரமங்களை, மோசங்களை, நாணயத் தவறுதல்களை நானும் சொல்லுகிறேன். யார் சொல்வது சரியென்று முடிவு செய்யப்படட்டும். இந்த நாட்டுப் பார்ப்பனர்களுடையவும், பார்ப்பனீயத்தினுடையவும், காங்கிரசினுடையவும், அரசியலினுடையவும், தேசாபிமானத்தினுடையவும் 30, 40 வருஷத்திய வண்டவாளமும் கோடிவழிப்பட்டியும் என்னிடமிருக்கிறதேயொழிய நான் வெறும் ஆள் மாத்திரம்தானென்று கருதிக்கூப்பாடு போட்டு மிரட்டியோட்டி விடலாமென்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள்.

நான் மொட்டை மரம். என்னை மிரட்டுவதற்கு உங்களிடம் சரக்குக் கிடையாது. உத்தியோகமோ, பணமோ, வயிற்றுச் சோற்றுக்கு வழியோ, ஒரு பெருமையோ கவுரவமோ எதிர்பார்த்துப் பொதுச்சேவையில்இறங்க வில்லை 6, 7 தடவை ஜயில் பார்த்தாய் விட்டது. சிவில், கிரிமினல் இரண்டும் பார்த்தாய் விட்டது. பார்ப்பனர்கள் தொல்லைகளையும் அவர்களால் கூடிய மட்டிலும் செய்து பார்த்தாய் விட்டதை அனுபவித்துமாய்விட்டது. காடு வா வா என்கிறது, வீடு போ போஎன்கின்றது. நான் செத்தால்எனக்காக அழுபவர்கள் கூடயாருமில்லை, என்னால் காப்பாற்றப்படவேண்டியவர்களும் யாருமில்லை. நான் ஒற்றையாள்—"நின்ற நாளைக்கு நெடும் சுவர், விழுந்தால் குட்டிச்சுவர்" முழுகிப்போவது ஒன்றுமில்லை.

**எலக்ஷன் முடிந்த எட்டாம் நாள் நான் அரசாங்க விருந்தாளியாய்ப் போகப் போகிறேன்.**

காங்கிரஸ்காரர் கேள்வி:— அப்படியானால் நீங்களேன் காங்கிரசில் சேரக்கூடாது?

ஈ. வெ. ரா.:— சேருவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். இந்தப் பம்பாய் காங்கிரசில் தோழர் காந்தியவர்கள் விலகிப்போய் விடுவதாகச் சொல்லுகிறாராம்.

அந்தப்படி அவர் விலகி விடுவாரானாலும்—எனது திட்டங்களை ஜஸ்டிஸ் கக்ஷி ஒப்புக்கொள்ளவில்லையானாலும் நான் காங்கிரசில் சேர்ந்து எனது திட்டத்தை நடத்த முயற்சிக்க உத்தேசித்தி

# தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாருக்கு ஓர் பஹிரங்கக் கடிதம்.

(உடுமலைப்பேட்டை சுயமரியாதைச்சங்கக்காரியதரிசி தோழர் எம். எஸ். கனகராஜன் எழுதுவது)

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு, உடுமலைப்பேட்டை, சுயமரியாதை சங்கக் காரியதரிசியாகிய தோழர் எம். எஸ். கனகராஜன் வணக்கமாய் எழுதுவது:—

இப்போது நீங்கள் தற்பொழுது இரண்டு கட்சியே இந்தியாவிலிருக்கிறதென்றும், ஒன்று காங்கிரஸ், மற்றொன்று சர்க்கார் என்றும் பிரசாரம் செய்து வந்திருக்கிறீர்கள். செய்தும்வருகிறீர்கள். அந்தப்படிக்குப் பார்த்தால் என்னுடைய நிலைமை இருகட்சிகளிலும்சேராதவனாகவே தெரிகிறது.

நான் தற்பொழுது மதப்பாதுகாப்பை அளிக்கும் கொள்கையையுடையகாங்கிரஸை எதிர்க்கிறேன் என்பது உண்மை. ஆனால் நீங்கள் பிரசாரம் செய்யும் மாதிரி சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவனா என்று பார்த்தாலோ அதுவும் மோசமாகவிருக்கிறது. இந்த ஒரு வாரத்திற்கு முன்புதான் எமது ஊர் சப்இன்ஸ்பெக்டர் என்னை அழைத்து சுயமரியாதை சங்கத்திற்கு "நீங்கள் தான் காரியதரிசியோ, உங்கள் கொள்கை யென்னஎன்று விசாரித்தார் இதைக்கவனித்தால் சர்க்காருக்கு நானும், எனது சகாக்களான சுயமரியாதைக் காரர்களும் நல்ல பிள்ளைகள் அல்ல வென்பது வெளியாகிறது. ஆகையால் நீங்கள் பிரசாரம் செய்கிறபடி சர்க்காரும் காங்கிரசும் தான் தற்பொழுது இந்தியாவிலுள்ள கட்சிகள் என்பது தவறு என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது உண்மைஎன்பதை நான்ருஜுப்படுத்த சித்தமாயிருக்கிறேன். இது உண்மை என்பதை யாவரும் அறிவார்கள். நீங்களும், எமது கட்சித் தலைவர்தோழர்ஈ.வெ.ராமசாமியைப்பற்றி அறிவீர்கள் அவர் காங்கிரஸ்விரோதி என்பதோடுராஜத்துவேஷத்திற்காகத்தண்டிக்கப்பட்டதையும் நீங்கள் மறுக்கமுடியாது. ஆகையால் நீங்கள் இனிமேல் இந்தியாவில் காங்கிரஸ் கட்சியும், சர்க்கார் கட்சியும் தான் இருக்கிறது; என்று பிரசாரம் செய்யக் கூடாதென்பதோடு, முன்பு அம்மாதிரி பிரசாரம் செய்ததை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கொள்கையாதென்றால் மதங்களைஒழிப்பது தான். அதை காங்கிரஸ் ஒத்துக் கொள்ளும் வரை காங்கிரசை எனது கொள்கை எதிர்த்துத் தீர வேண்டியதாயிருக்கிறது. ஒரு சமயம் காங்கிரஸ் தனது (மதபாதுகாப்பு] கொள்கையை மாற்றிக் கொண்டு மதங்கள் ஒழிய வேண்டும் என்று தீர்மானித்தால் நான் காங்கிரஸில் ஓர் அங்கத்தினனாகச் சேர்ந்து விடுவேன். ஆனால் காங்கிரஸ் பல விஷயங்களையும் கவனிக்க வேண்டிய சபையாகையால் "மத ஒழிப்புச் சங்கம்" என்று ஒரு சங்கம் தனியே பிரத்தியேக மாக வேலை செய்து கொண்டுதானிருக்கவேண்டும். கோயமுத்தூர் காங்கிரஸ் மகாநாட்டில் நீங்கள் சுயமரியாதை இயக்கத்திலுள்ள இளைஞர்களை காங்கிரஸில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருப்பதாலேயே என்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றபடி எங்கள் கட்சியில் ஒருவரும் சட்டசபைத் தேர்தலில் கலந்து கொள்ளாததால் நாங்கள் உங்களைப் போல் எங்கள் கொள்கைகளைமறைக்கவோ, மாற்றவோ பல்டி அடிக்கும் படி நேரிடவில்லை என்றே நம்புகிறேன். ஆலயபிரவேச மசோதா சட்டசபையில் நிறை வேற நீங்கள் எடுத்துக் கொண்ட பிரயாசை யாவரும்அறிந்ததே. கேவலம் சனாதனிகளின் ஓட்டு வாங்குவதற்காக அம்மசோதா சட்டசபையில் கொண்டு வருவதில்லை என்று சொல்லியது பொது வாக சீர்திருத்த வாதிகளுக்கு உங்கள்மீது முன்னிருந்த சந்தேகம் பலப்படுவதோடு சனாதனிகளுக்கும் உங்களை ஓர் ஊர்ஜிதமாய் நம்பமுடியாத நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. ஏனெனில் பின்னால் ஒரு சமயம் காந்தி "ஆலயப்பிரவேச மசோதா சட்டசபையில்" நிறை வேற்றாவிட்டால், சாகும் வரை பட்டினி என்று சொன்னால், உடனே நீங்கள் உங்கள் வாக்குறுதியை விட மகாத்மா உயிர் பெரிது என்று சொல்வதற்கும் பின் வாங்க மாட்டீர்கள் என்பதுசனாதனிகளுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் தேர்தலை உத்தேசித்து எவ்வளவு சத்தியம் வேண்டுமானாலும் செய்யலாம். சமயத்துக்குத் தகுந்தபடி பேசுகிறவர்களை பொது மக்கள் நம்புவது கஷ்டமல்லவா.

நீங்கள் டாக்டர், வரதராஜுலு நாயுடுவின் தேச பக்தியில் குறை கூறுவதில்லை. ஆனால் அவர் நாலணா கொடுத்து உங்களிடம் காங்கிரஸ் டிக்கட் வாங்காததால் தான் அவருக்குப் போட்டி போட்டிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். இது உண்மையானால், இது மாதிரியே காங்கிரஸ் பக்தராயிருந்து, காங்கிரஸிலிருந்து விலகி, காங்கிரஸ் டிக்கட் வாங்காமல் தேர்தலுக்கு நிற்கும் மாளவியா வுக்கு ஏன் நீங்கள் போட்டி போடவில்லை. இதிலிருந்து நீங்கள் காங்கிரஸில் வரதராஜுலு நாயுடு சேரவில்லை என்று சொல்லும் காரணம் பொருந்தவில்லையே. ஒருவர் பிராமணர் மற்றவர் பிராமணரல்லாதார் என்பதல்லாமல் வேறென்ன? தெற்கு மாகாணங்களை பொறுத்தமட்டில் உங்கள் நெடுநாளைய எதிரிக்குப் போட்டியிட்டிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது.

நான் முதலில் எழுதியவிஷயங்களைப்பார்த்தால், சர்க்காருடன் சேராமல், காங்கிரஸுக்கு வெளியிலும் ஜன சமூகத்திற்கு உண்மையாக பாடு படக்கூடிய கட்சிகளும், தனிப்பட்ட தலைவர்களும் இருக்கிறார்கள் என்பது நீங்கள் அறியாமலிருக்கமுடியாது. ஏனென்றால் காங்கிரஸை எதிர்க்கும் சுயமரியாதைக் கூட்டங்களுக்கு சி. ஐ. டி. கள் விஜயம் செய்கிறார்கள். அப்படியிருக்க நீங்கள் காங்கிரஸில் சேராதவர்கள், சர்க்கார் கட்சியை சேர்ந்தவர்கள் என்று பிரசாரம் செய்வது அக்கிரமமென்று உங்களுக்குதோன்றவில்லையா? ஓட்டு வாங்குவதற்காக என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்பது உங்கள் கொள்கையா?

மனித சமூகத்திற்குநன்மைபயக்கும்கொள்கைகளை நாம் பிரசாரம் செய்வதை நீங்கள் தேசத்துரோகம் என்றால் தேசீயம் என்று நீங்கள் சொல்வது மனித சமூகத்துரோகம் என்று பிரதி பலிக்கிறதல்லவா? அத்துடன் முடிவாக உங்களை ஒரு கேள்வி கேட்டு பதில் தெரிய ஆசைப்படுகிறேன். சாரதா சட்டத்தை ஆதரிப்பவர்கள் தேசத்துரோகிகளா? சாரதா சட்டத்தை ஒழிக்க முயன்றவர்கள் தேசத்துரோகிளா? நீங்கள் வேண்டுமானால், இது சமூகவிஷயம் என்று மழுப்பலாம். தேசம் வேறு சமூகம் வேறா? சமூகத்துரோகிகள் தேசத்துரோகிகளல்லவா? தோழர் சத்தியமூர்த்தி அய்யர் சாரதா சட்டத்தைதீவிரமாக எதிர்த்தவர். அவர் தேசத்துரோகியா? சமூகத்துரோகியா? நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்! அவரையும் தேசபக்தர் என்று நீங்கள் உண்மையாக நினைத்திருந்தால், சமூகத்துரோகிகள் தேசபக்தர்களாகவிருக்கமுடியுமா? அல்லது ஜாதிஅபிமானத்தை முன்னிட்டு அவரை காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தினீர்களா?

மேற்கூறிய சந்தேகங்களைதெளிவுசெய்வீர்களென்று நம்புவதுடன் தற்பொழுது காங்கிரஸ், சர்க்கார்என்றுஇரண்டு கட்சிகளே நாட்டிலிருக்கின்றனஎன்று நீங்கள் இது வரை தவறுதலாய் பிரசாரம்செய்ததை வாபீஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன்.

---

(16ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறேன்.

### இனியும் கேட்கலாம்.

இன்று 8 மணிக்குக் கூட்டத்தை முடித்துக்கொண்டு வருவதாக ஒரு பெரிய விருந்துக்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன். மணி 8½ ஆகிவிட்டது. இனியும் கேள்வி யிருந்தால் கேட்கலாம். இன்னும் 15 நிமிஷம் இங்கு இருக்க ஆக்ஷேபணையில்லை யென்று சொல்லிச் சிறிது நேரம் சும்மா நின்று கொண்டிருந்தார். யாரும் எவ்வித கேள்வியும் இல்லாததால் கூட்டத்தைமுடித்துவிடுகிறேனென்று சொன்னார்.

மறுநாள் காங்கிரசில் ஒரு கூட்டம் கூட்டப்படுமென்று ஒருவர் சொன்னார். அதற்குத் தோழர் ஈ. வெ. ரா. யாவரும் அங்கு போகலாமென்றும், அங்கு ஒரு கலாட்டாவும், குழப்பமும், கேள்வி கேட்பதும் என்பதுகூட சு. ம. காரர்கள் செய்யாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு கூட்டத்தை முடித்ததாகச் சொல்லிவிட்டு விருந்துக்குப் புறப்பட்டார். காந்திக்கு ஜே என்று ஒருவர் கூப்பாடு போட்டார். ஈ. வெ. ராமசாமிக்கு ஜே என்று ஒரு கூட்டம் கூப்பாடு போட்டது தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் காந்திக்கு மாத்திரம் ஜே போட்டால் போதும். அவர் நிலை இன்று பயணம் சொல்லிக் கொள்வதில் இருப்பதால் அவருக்குத் தான் மரியாதை செய்யவேண்டும். நான் இன்னம் கொஞ்ச நாளைக்கு இருக்கிறவன் ஆதலால் எனக்கு வேண்டியதில்லை யென்று சொல்லி வண்டியேறினார்.

## தஞ்சை சுயமரியாதை சங்கம்.

7.10-34 மாலை கூடிய ஷை சங்க கூட்டத்தில் நிறை வேறிய தீர்மானங்கள்:—

1. சுயமரியாதை இயக்கஸ்தாபகரான தோழர் ஈ.வெ.ராமசுவாமி அவர்களும், தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்களும் போட்டியின்றி ஈரோடு முனிசிபல் எலக்ஷனில தேர்ந்தெடுக்கப்பட்டதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

2. தோழர் மரகதவல்லியம்மாள் காரைக்குடி முனிசிபல் சபைக்கு கௌன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப்பற்றி இக்கூட்டம் பாராட்டுகிறது.

3. தஞ்சை திருச்சி இந்திய சட்டசபை தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக குமாரராஜா தோழர் முத்தையா செட்டியார் அவர்களை அபேட்சகராக நிற்க வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது

4. தோழர் சி.டி.நாயகம் அவர்கள் மருமகள் தோழர் மகாலெட்சுமியம்மாள் காலஞ் சென்ற செய்தியைக் கேட்டு இந்த கூட்டம் தங்கள் அனுதாபத்தை த்தெரிவிக்கிறது.

---

(7.ம் பக்கத்தொடர்ச்சி)

காங்கிரசிற்கு வெளியிலிருந்தபடியே அரிய பெரிய தியாகங்கள் செய்து அதன் பயனாகத்தேசத்திற்கு உருப்படியான நன்மைகளை உண்டாக்கிய தியாகிகள் அனேகர் உளர். கொஞ்சம் பகட்டுடன் அதிக வேலைகளையும், பாசாங்குகள் யாதுமின்றி உண்மைத் தொண்டையும் காங்கிரஸுக்கு வெளியிலிருந்தே செய்தவர்களும் இருக்கிறார்களென்பதை ஞாபகமூட்டுகிறேன். சர் டேஜ் பகதூர் சாப்ரூ, சர் முகம்மத்ஷாபி முதலியவர்களுடைய சிறுபிராய காலத்திலிருந்து மாண்டேகு சீர்திருத்தங்கள் வந்த இக்காலத்தின் இந்நாள் வரையும் நடந்த காரியங்களைச் சற்று ஊன்றி கவனித்தோமானால் உண்மையை உணரலாம். சந்தர்ப்பம் கிட்டிய போதெல்லாம் அதை ஒத்துழைப்பின் மூலம் உபயோகித்தவர்களே இந்தியாவிற்கு நல்ல ஊழியம் செய்திருக்கிறார்களேயொழிய, ஒத்துழையாமை, விதியையனுஷ்டித்தவர்களும், தோல்விக்கீதம் பாடியவர்களும், அழிவுக் கூத்தாடியவர்களும் தேசத்திற்கு ஒரு ஊழியமும் செய்யவில்லை.

---


## புதிய பத்திரிகை.

"சிறுவர் அறிவுக்கதிர்"
சீக்கிரம் வெளிவரும்.

பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு எல்லா வகைகளிலும் அறிவு புகட்டும் புதுமாதிரியான ஓர் மாதாந்தரப்பத்திரிகை.

வருஷ சந்தா உள்ளூர் 8 அணா.
" வெளியூர் 10 அணா.
தனிப்பிரதி 9 பை.

உடனே சந்தாதாராகுங்கள்
K. J. வேதமுத்து,
தமிழ்ப்பண்டிதர், L. M. போதனாமுறைப்பாடசாலை ஈரோடு.

---

## மலையாளம் சில்க்.

2¼-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு "14-0
ஷை 4½-நீளம் டஜன் 1-க்கு "10-0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்,

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

## "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேட்ரோட், நாகர்கோவில்.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

---

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

## யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.

யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.

---

# நீரழிவு.

## நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டை, பவுந்திரம் முதலிய வியாதிகளுக்கு 120 புடம் போட்ட அப்ரேக் செந்தூரமும் மேகநாத நெய்யும் சாப்பிடுங்கள்.

இந்த மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான ரோகஸ்தர்கள் குணமடைந்து விட்டார்கள். நீரழிவுக்கு இதைப்போன்றதொரு குணமுள்ள மருந்து வேறெங்கும் கிடைக்காது. போலி மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு மோசம் போகாதீர்கள்.

### இதற்குப் பரீக்ஷை.

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8 துவாரங்கள் போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் செந்தூரத்தைச் சிறிது போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்திவிடும். இதைப்போலவே நீரழிவினால் அதிகமாகப்போகும் நீரை நிறுத்தியும், நீரில் சர்க்கரை இருந்தால் அதனை மாற்றியும், நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்திமேகம், நீடித்த வெள்ளை, இந்திரியம் நீருடன் போதல், பவுந்திரம் முதலிய வியாதிகளை அதிவிரைவில் குணப்படுத்துகின்றது. எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்த போதிலும் 24 நாள் வரை நமது செந்தூரத்தைச் சாப்பிட்டால் குணமடையலாம்.

24 நாள் மருந்து விலை ரூ. 15. 12 நாள் மருந்து விலை ரூ. 10. 3 நாள் மேகநாத நெய் ரூ. 5.

குறிப்பு:— சிலருக்கு நீரானது பசு மூத்திரம் போலும் கற்றாளஞ்சாற்றைப்போலும் சுண்ணாம்புத் தண்ணீர் போலும், பனங்கள்ளைப்போலும், நெய்யைப்போலும், தேனைப்போலும், கொழுப்பைப் போலவும் இறங்கும். காய்ச்சினால் அந்தந்த வாசனை கொடுக்கும். இப்படிப்பட்ட நோய்களெல்லாம் நிச்சயமாய் குணமாகின்றது. நம்பிக்கையுடன் மருந்தைத் தருவித்துச் சாப்பிடுங்கள். நம்பிக்கையற்றவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொண்டு போகலாம். மருந்துடன் சாப்பிடும் பத்திய பாகங்கள் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் 5 ரூபாய் அட்வான்சாய் அனுப்பி மருந்துக்கு ஆர்டர் செய்யவேண்டும்.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,
சித்தவைத்தியசாலை, ஈரோடு.
(கோயமுத்தூர் ஜில்லா)

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம், லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.